UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980 -12- 3
PERIODICALS DIVISION
LIBRARY

பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 கார்த்திகை 18 முஹர்றம் 24 இதழ் 294
யாழ்ப்பாணம் புதன்கிழமை 3 - 12 - 80

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி

81ம், 82ம் ஆண்டிற்கான
வகுப்புக்கள்

தாவரவியல்-
சிவவீரசிங்கம்
விலங்கியல்-
ஜெயானந்தகுரு
இரசாயனம்-
அன்ரன் மாஸ்டர்
பௌதிகம் - கலாபரன்
தூயகணிதம்
பிரயோககணிதம்
-லோகேந்திரன்

## காற்று ஏற்படுத்தும் பீதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அடிக்கடி வீசும் கச்சான் காற்று மக்களை பதறித்துடிக்கவைக்கிறது.

கடந்த இருவருடங்களுக்கு முன்பு இதே மாதம் வீசிய பயங்கச் சூறவளிதான் இப்பயத்தையும் பதறலையும் ஏற்படுத்துகின்றது.

காற்று வீசத்தொடங்கியதும் புயல் காற்று மீண்டும் வந்து விட்டதே என்ற சத்தத்துடன் மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடிச் செல்கின்றார்கள்.

# இராமேஸ்வரம் - தலைமன்னர் கப்பல்சேவை 3-ல் ஆரம்பம்!

## இந்தியத் தூதுவர் - 'சிவா' சந்திப்பில் ஏற்பாடு

(கொழும்பு)

**மதுரையில் நடைபெறும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி, இராமேஸ்வரம் - தலைமன்னர் கப்பல் சேவை; முன்னர் அறிவிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாகவே ஆரம்பமாகும்.**

இக்கப்பல் சேவை குறித்து, தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரகாமுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து கப்பல்சேவையை முன்னதாகவே ஆரம்பிக்க இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு அடுத்த மாதம் நான்காம் திகதி மதுரையில் ஆரம்பமாவது தெரிந்ததே.

காலநிலைச் சீர்கேடு காரணமாக கடந்த அக்டோபர் மாதம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இராமேஸ்வரம்-தலைமன்னர் கப்பல் சேவை மீண்டும் ஜனவரி மாதம் 5-ம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவருடன் திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இக்கப்பல் சேவையை அடுத்த மாதம் மூன்றும் திகதி ஆரம்பிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமான இந்தியத் தூதரக அறிவிப்பு, அடுத்த சில தினங்களில் வெளிவரும். (ம

## ஜி. ஸி. ஈ. பரீட்சைகள் இன்று ஆரம்பம்

[கொழும்பு]

ஜி. ஸி. ஈ. [சாதாரண தரம்] பரீட்சைகள், இன்று ஆரம்பமாகின்றன. இடைக்காலப் பாடத்திட்டத்துக்கு அமைய இப்பரீட்சை நடைபெறுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகள் இம்மாதம் 15ம் திகதிக்கு முன் வெளியாகுமென பரீட்சைத்திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இன்று ஆரம்பமாகவுள்ள ஜி ஸி ஈ. (சாதாரணதர) பரீட்சைக்கான வேலைகள் நடைபெற்று வந்தமையினாலேயே க. பொ. த (உயர்தர) பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

## "யாழ்ப்பாணத்தில் வேலைவங்கிபடிவம்மூலம் ஒருவருக்குமட்டுமே வேலை கிடைத்துள்ளது"

### சபையில் 'யோகேஸ்' குற்றச்சாட்டு

(கொழும்பு)

"வேலை வங்கிப் படிவம் மூலம் யாழ்ப்பாணத்தில் ஒருவருக்கு மட்டுமே வேலை கிடைத்துள்ளது"

இவ்வாறு யாழ்ப்பாணம் எம் பி. திரு. வெ. யோகேஸ்வரன் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று தொழில் வாய்ப்பு,இளைஞர்விவகார அமைச்சின் மான்ய ஒதுக்கீடு மீது குழுநிலையில் விவாதம்

(8ம் பக்கம் பார்க்க)

## ஒரே மாதத்தில் 457 பேர் கருத்தடை!

(யாழ்ப்பாணம்)

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் கருத்தடை செய்துகொள்பவர்களுக்கு ஐநூறு ரூபாய் உதவிப்பணம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒக்டோபர் மாதத்தில் மட்டும் நானூற்றி ஐம்பத்தேழுபேர் கருத்தடை செய்துள்ளனர். இவர்கள் தமக்குரிய ஐநூறு ரூபாவையும் யாழ் செயலகத்தில் திட்டமிடல்ப் பகுதி அதிகாரி திரு புவனேந்திரனிடமிருந்து பணத்தைப் பெற்றுச் சென்றனர். செயலகத்தில் நேற்று பெண்களும் குழந்தைகளுமே பெருமளவில் காணப்பட்டனர்.

## அரிசி விற்பனை மோசடி; சந்தேகநபர்களுக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ். நெல் சந்தைப்படுத்தும் சபையின் விற்பனை நிலையமொன்றில் அரிசி மூடைகள் தனியார் கடைக்கு வழங்கப்பட்டது தொடர்பான வழக்கில் சந்தேக நபர்களான மேற்படி திணைக்களத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நெல் சந்தைப்படுத்தும் சபையின் யாழ். சில்லறை அரிசி விற்பனை நிலையத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக சில்லறை விற்பனை நிலயத்தின் விற்பனைப் பிரதிநிதி நிமலநாதன், கிளிநொச்சி நெல்சந்தைப்படுத்தும் சபையின் அதிகாரி எஸ் சோமசுந்தரம் ஆகியோர் யாழ். பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு; ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக வெகு விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவிருக்கிறது. (கொ

## ரூ. 1,50,000 கடத்தல்முயற்சி முறியடிக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த பொருட்களை சுங்கப் பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமாகக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூவரையும் யாழ். சுங்க இலாகா அதிகாரிகளான எம். அசோகன், கே. இராசரத்தினம் ஆகியோர் நாவாந்துறைக் கடற்கரையில் வைத்து கைது செய்துள்ளனர்.

பொலியஸ்டர் துணிவகைகள், வாஜெலிகள், கல்குலேட்டர்கள் ஆகியவற்றை யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குக் கடத்தல் செய்யும் நோக்கத்தோடு மேற்படி பொருட்கள் லொறி ஒன்றில் ஏற்றப்பட்டு நாவாந்துறை நோக்கிச் செல்வதாக யாழ் சுங்கப்பகுதியினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சுங்க அதிகாரிகள் மேற்படி லொறியை துரத்திச் சென்று நாவாந்துறையில் வைத்து சோதனையிட்டபோது லொறிக்குள் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

லொறியையும், சட்டவிரோத கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூவரையும் கைது செய்த சுங்க இலாகா அதிகாரிகள் மேலும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கொ

## பிராமியஎழுத்துக்கொண்ட புராதனசின்னங்கள்!

(யாழ்ப்பாணம்)

மிகப் பழமை வாய்ந்ததும்; வரலாற்றுக் காலத்தை உறுதிப்படுத்தும் தரவுகளைக் கொண்டதுமான பிராமிய எழுத்துப் பொறிக்கப்பட்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள்; கூரை ஓடுகள்; பானைகள்; எலும்புக் கூடுகள்; அம்மிக் குளவிகள்; செம்புக் கம்பிகள்; இரும்புப் பட்டங்கள் ஆகியன ஆனைக்கோட்டையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

வெளிக்கள ஆய்வினை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர்களும், சிறப்பு முதுகலைமாணிமாணவர்களுமே இப்பொருட்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஆனைக்கோட்டை பிரதேசத்திலுள்ள மண்குவியல் [illegible] களில் பெருமழையின் காரணமாக இத்தரவுப் பொருட்கள் மேலெழுந்து வந்ததைத் தொடர்ந்து ஆய்வினை மேற்கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பிரிவினரைச் சேர்ந்த வடமாகாண தொல்பொருள் ஆய்வுக் குழுவினர் இவ் ஆய்வினை [illegible] பட்ட புராதன பொருட்கள் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் கிறிஸ்து சகாப்தத்தை அடுத்தும் அதற்குமுன்பும் 'பெரும் கற்காலப்பண்பாடு' நிலவி வந்தஉண்மைகளை ஒப்புடைய ஆய்வுக்கு சான்று பகருவதாக கருதப்படுகிறது. சமீப காலமாக 'பெருங்கற் [illegible] பண்பாடு' பற்றிய ஆய்வு பிரபல்யம் பெற்றுவரும் இக்காலத்தில் இக் கண்டுபிடிப்புக்கள் புதிய திருப்பத்தை ஏற்படுத்துமென நம்பப்படுகின்றது.

இவ் ஆய்வுக்கு தகவல்களைத் தரவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் கா. இந்திரபாலாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஆய்வு தொடர்ந்து நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

3 பரப்புக் காணி K. K. S. வீதியில் கொக்குவில் சந்திக் கண்மையில் தலையாளி என்னும் இடத்தில் விற்பனைக்குண்டு. விலை விபரத்திற்கு R. யோகசீலன் (மாஸ்ரர்), "யே பல்", சேச் ஒழுங்கை, உடுவில். 7500

சிறந்த மிளகாய் (எம். ஐ 1) கத்தரி நாற்றுகள். விலை 3—4 சதம். அதிகம் வேண்டுவோருக்கு சலுகை. கிறீஸ்தவக் கல்லூரி, கோப்பாய். 7502

மானிப்பாய் ரோட் 75 நம்பரிலுள்ள காணி 1 பரப்பு 9·38 குழி இரு பக்கமும் ரோட்டிலமைந்துள்ளது. விலை விபரங்களுக்கு எஸ். கணபதிப்பிள்ளை, 28, ஸ்ரான்லி ரோட்டில் நேரடியாக தொடர்பு கொள்ளவும். 7504

சென். பற்றிக்ஸ் பாடசாலைக்கு அருகில் 1½ பரப்புக் காணியும் 7 அறைகளைக் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. உரிமையாளர்: மா. புவனேந்திரன், தொடர்பு: மா. கணேஸ், 41/12, மத்தியூஸ்வீதி, யாழ்ப்பாணம். 7495

## தேவை

விஸ்கற்வெட்டுவதற்கு விஸ்கற் வேலை தெரிந்தவர்கள் தேவை (பெண்களும், ஆண்களும்). தொடர்பு: நியூ பாரத் பேக் ஹவுஸ், 86, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 7501

புதியது அல்லது பழையது மிருதங்கம் உடன் தேவை S, நாகராஜா, 107, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். டெலிபோன்: 287. (7506)

## வகுப்புகள்

O/L, A/L வகுப்புகளுக்கும் வளாக மாணவருக்கும் 25 வருடங்களுக்கு மேல் ஆங்கிலம் கற்பித்து அனுபவ முதிர்ச்சி பெற்ற ஆசிரியரினால் நல்லூரிலும், தாவடியிலும் ஆங்கில வகுப்புக்கள் மட்டும் நடத்தப்படும். முழுவிபரங்கட்கும் நேரிலோ அஞ்சல் மூலமோ கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும் சி. வீ. பிள்ளை. 1 9/4. கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 7497

## WANTED

Wanted Caterer from February. Applications close 15-12-80 For further details contact: General Secretary, Jaffna Y. M. C. A Canteen Tel: 7161. (7505)

# உரும்பராயில் திருடப்பட்ட தாலிக்கொடி யாழ். நகரில் மீட்பு!

## பதுளையில் ஒருவர் கைது!!

(மாவிட்டபுரம்)

உரும்பராயில் உள்ள வீடொன்றில் களவுபோன தாலிக்கொடி யாழ்ப்பாணத்தில் உள்ள இரு கடைகளிலிருந்து மீட்கப்பட்டதுடன் இக்கைவரிசையைச் செய்துவிட்டு பதுளைக்குப்போய் தலைமறைவாக இருந்ததாகக் கருதப்படும் நபரையும் அங்கு வைத்து சுன்னாகம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

உரும்பராயைச் சேர்ந்த சின்னத்துரை ஆசைமணி என்பவரது வீட்டில் போத்தலினுள் போட்டுமூடி வைக்கப்பட்டிருந்த 6500 ரூபா பெறுமதியான தாலிக்கொடி கடந்த மாதம் 19ம் திகதி திருட்டுப் போயிருந்தது.

இதுகுறித்து சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டதன் பேரில் விசாரணையிலீடுபட்ட சார்ஜன்ட் வேலாயுதபிள்ளை, கான்ஸ்டபிள் சிவயோகம் ஆகியோர் மேற்படி கைவரிசையிலீடுபட்ட நபரை பதுளைக்குச் சென்று அங்குள்ள தோட்டமொன்றில் வைத்துக் கைதுசெய்தனர்.

உரும்பராயைச் சேர்ந்த கறுவல் கந்தையா என்னும் நபர் மூலம் விசாரணை மேற்கொண்டபோது யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியிலுள்ள இரு கடைகளிலிருந்து தாலிக்கொடி மீட்கப்பட்டது.

மேற்படி நபரை சுன்னாகம் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

# ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க...

(உடுப்பிட்டி)

"தாயின் கருவில் இருக்கும் போதே அப்பிள்ளையின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவேண்டும். அப்பொழுதே பிறக்கும் அப்பிள்ளையை நல்ல முறையில் வளர்த்து உருவாக்க முடியும்."

இவ்வாறு உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ: க. ஈசுரபாதம் கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் பாலர் பாடசாலைக் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியில் நடைபெற்ற இக் கலைவிழாவில் உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு ஈசுரபாதம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"வளர்ச்சியடைந்த நாடுகளில் தாய் கருவுற்றிருக்கும் போதே அப்பிள்ளையின் வளர்ச்சியில் கூடியகவனம் செலுத்தப்படுகின்றது எமது நாட்டில் அநேகமானோர் வறுமையில் சிக்கியிருப்பதால் சிசு நல்ல வளர்ச்சியைப் பெறமுடியாது போஷாக்கு குறைந்தவர்களாகவே பிறக்கின்றனர்.

"சிறு பிள்ளைகளைப் பாலர் பாடசாலைகள் சிறந்த முறையில் உருவாக்குகின்றன. இப்பாலர்கள் கலைநிகழ்ச்சிகளில் நன்முகச் சோபித்து அவர்களில் தெய்வத்தைக்காண முடிகின்றது

"மத நிறுவனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்றவை இத்தகையபாலர் பாடசாலைகளை அமைத்துப் பாலகர்களைத் தக்கமுறையில் பயிற்றுவித்துத் தக்கவர்களாகவும் வல்லவர்களாகவும் உருவாக்க வேண்டும்".

விழாவில்பாலர்களின் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய் என்னும் இடத்தைச் சேர்ந்த ஜோசெப் கிருபைநாயகம் மில்ஸ் என்பவரினது மரணசாதனத்தினதும் எழுத்தாவணத்தினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 3578

(திருமதி) ஜநெற் கில்டா இராஜபூஷணம் மில்ஸ், "கிறீன் வில்லா", மானிப்பாய்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17-ந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றச்கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்,

பதிவாளர்.

1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17-ந் நாளன்று திகதியிடப்பட்டது. (7487)

## பரு.லயன்ஸ் மருத்துவசேவை

(புலோலி)

பருத்தித்துறை லயன்ஸ் கழகம் கரவெட்டிப் பகுதி மக்களின் நன்மைகருதி கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 7 ம்திகதி இலவசமாகப் பலவகை மருத்துவ சேவையையும் மிருக மருத்துவசேவையையும்நடாத்தவுள்ளது.

பல் வைத்தியம், மருத்துவம் குழந்தை வைத்தியம் ஆகிய துறைகளில் வைத்திய நிபுணர்களால் இலவச சேவை வழங்கப் படுவதுடன் கால் நடை கோழி ஆகியவற்றுக்கான வைத்தியம், நோய்தடுப்புச் சேவைகளும் வழங்கப்படுமென்றும், இச் சேவைகளைப் பெற விரும்பும் மக்கள் கரவெட்டி பங்குத்தந்தை அருட் திரு.ஜே. ஏ டொமினிக் அடிகளாருடன் தொடர்பு கொள்ளுமாறும் போராசிரியர் லயன் [illegible] வித்துள்ளார். (அ)

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம்
18-ந் திகதி புதன்கிழமை
(3-12-80)

மேடம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், களஸ்திரவழியால் பொருள்வரவிற்கும் இடமுண்டு, கண்ணியமான நடவடிக்கையில் ஈடுபடுவீர்கள்.

இடபம்: கடன் தொல்லை கவலையைத் தரும், உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும், நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம், எதிலும் உஷாராக இருக்கவும்.

மிதுனம்: பிதாவழிமூலம் மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கலாம், பொதுப்பணி மூலம் புகழுக்கும் இடமுண்டு, தருமகாரியங்களில் விருப்பம் மேலிடும்.

கடகம்: கடமையில் முதலிடம் கிடைக்கும், பதவியில் உயர்வுக்கும் இடமுண்டு, வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும், சிறப்பான தினமாகும்.

சிங்கம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் புதிய நண்பர்களைக் கொண்டுவரும், மக்கள் பணியே மகேசன் பணியாகக் கருதுவீர்கள், பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

கன்னி: உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும், பணவிவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம், தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும், தனிவழிப் பயணத்தை இன்று தவிர்க்கவும்.

துலாம்: முகமன் பேசிக் கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வர், கணவன் மனைவி உறவுமுறை பூசல் நிறைந்ததாக இருக்கும். பொறுமை விரும்பத்தக்கது.

விருச்சிகம்: பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித்தரும், பிரச்னைகள் இன்று நல்ல முடிவை அடையும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், மாணவர்க்கு இன்று சிறப்பான தினம்.

தனுசு: துன்பத்தின் ரேகைகள் படரும், தூக்கம் கெடும், எதிர்பார்த்ததில் தடைகள் தோன்றும், மனதில் ஆத்திரம் அலைமோதும், வாகனச் சாரதிகள் மனஅமைதியுடன் இருக்கவும்.

மகரம்: கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும், தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், வாகனம் செலுத்துவோர்க்கு இன்று அதிக ஆதாயம் கிடைக்கும், தொழிலில் முன்னேற்றமும் காணப்படும்.

கும்பம்: புத்திரர்வழியால் புகழ்வந்து சேரும், நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும், குடும்பத்திலும் பிணைப்புகள் பலப்படும், பொதுவாக நல்ல தினம்.

மீனம்: தானிய நஷ்டத்தால் கவலைகள் தலைகாட்டும், உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளவும், திருப்தியற்ற தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# சைவமணியின் சைவப்பணி

கண்ணியக் கடமையாளர் என்று கருத்துடன் அழைக்கப்படுவோரில் ஆசிரியர்களும் அமைகின்றனர்.

ஆசானென்றும் கணக்காளன் என்றும் கற்கப்படுவோன் என்றும் இன்னும் மேலாக குருவென்றும் நற்றகை நாமங்களுக்குரிய ஆசிரியரின் அரும்பணி எமது எதிர்காலசந்ததியினர்க்கு பெரும் பயனுடையது.

"சைவமணி" திரு. சி. மருதபிள்ளை (உபஅதிபர் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த கனிஷ்ட மகா வித்தியாலயம்) அவர்கள் 15-10-1922ம் ஆண்டு பிறந்து செந்தமிழ்த் திறனும் சிவநெறிப் பண்பும் மிக்கவராக மாணவப் பருவத்தை பயன்படுத்தி வருகையில் ஆசிரியப் பரம்பரையே உருவாக்கிய பெரியாரும் சைவ வித்தியா விருத்திச் சங்க ஸ்தாபகருமான அமரர் "இந்து போட்" இராசரத்தினம் அவர்களின் காலத்தில் தனது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார்.

"சைவமணி" அவர்கள் அபிராமி அந்தாதி "கந்தபுராணம்", "கந்தரலங்காரம்" ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

ஆசிரியமணியின் செந்தமிழ்த் திறனையும் சிவநெறிப் பண்பையும் பாராட்டி நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் அவர்கள் "சிவபக்த சிகாமணி" என்னும் பட்டத்தினை வழங்கி கௌரவித்துள்ளார். சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வழிபடுவோர் சபையினர் "சைவமணி" என்னும் பட்டத்தினை வழங்கியுள்ளனர்.

தனிமனிதன் சமுதாயத்தோடு கொள்ளும் தொடர்பினை வலுவுள்ளதாக்கி மனிதனைப் பயனுள்ளவனாய் மாற்றுவதே கல்வியின் முழுமையான இலக்காகும். நான் என் குடும்பம் - என் இனம் என்ற பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டு சர்வ உலகையும் நேசிக்க வல்ல பரந்த மனப்பான்மையோடு கூடிய உன்னத இலட்சியத்தைக் கல்வி மூலம் படிப்படியாக வளர்த்திடல் வேண்டும் இந்த அருந்தொண்டினுப் "சிவபக்தசிகாமணி" "சைவமணி" திரு சி மருதபிள்ளை தனது போராற்றலை மாணவ சமுதாயத்துக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தகைய சேவையை ஆற்றி தமது 58ம் ஆண்டு பூர்த்தியாகின்றவேளை சேவையிலிருந்தும் இளைப்பாறும் ஆசிரியமணியின் சேவை பல்லாண்டு தொடரப் பிராத்திப்போம்

க. சிதம்பரநாதன்

# கிராம சேவை அலுவலர் நேர்முகப்பரீட்சை

(துணுக்காய்நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம சேவை அலுவலகர் வெற்றிடங்களுக்காக கடந்த வியாழனன்று முல்லைத்தீவு கச்சேரியில் நேர்முகப்பரீட்சை நடைபெற்றது முல்லைத் தீவு மாவட்டம் தோன்றுவதற்கு முன்னர் யாழ்ப்பாணம் வவனியா, மன்னார் கச்சேரிகளில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சைகளில் தெரிவு பெறுதோரே இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். துணுக்காய், பாண்டியன்குளம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் சுமார்40 பேர் இந்த நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டனர். நேர்முகப் பரீட்சையை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையிலான குழு நடத்தியது.

# இயக்குனர்சபை

(உடுப்பிட்டி)

கட்டைவேலி நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14ம் திகதி நடைபெறவுள்ளது.

இப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக இயக்குனர் சபைத்தெரிவும் இடம்பெறும். (அ)

யாழ். அரசினர் வைத்தியசாலை
சிற்றுண்டிச் சாலைக்கான
கேள்விப்பத்திரம்
யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில்
கூட்டுறவு நல விருத்திச் சங்கத்தால்
நடாத்தப்படும்
சிற்றுண்டிச்சாலையை
01-01-1981 முதல் 31-12-1981 வரை
பொறுப்பேற்று நடாத்துவதற்கு
கேள்விப்பத்திரங்கள்
கோரப்படுகின்றன.
கேள்விப்பத்திரங்களை மேற்படி சங்கத்தின் காரியதரிசியிடமிருந்து பத்திரப்பணமாக ரூபா 15/-ம் வைப்புப்பணமாக ரூபா 100/-ம் நேரில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் பத்திரப்பணம் ரூபா 15/-ம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது
விண்ணப்ப முடிவு திகதி: 10-12-1980
முகவரி: தலைவர்,
யாழ் கூட்டுறவு நல விருத்திச் சங்கம்,
அரசினர் வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது

## இந்தோனேஷிய அதிபருக்கு அளித்த விருந்தில் இந்திய ஜனாதிபதி கவலை

புதுடில்லி, டிச. 2

''சர்வதேச அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் இப்போது ஆபத்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.'' இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி கவலை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உத்தியோக பூர்வவிஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இந்தோனேஷிய அதிபர் திரு. சுகார்ட்டோவுக்கு நேற்று அளித்த இரவு விருந்தின்போதே திரு. ரெட்டி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அணிசேரா இயக்கம் ஏற்றுக்கொண்ட மனிதகுலத்தின் ஆதாரப் பிரச்சினைகளான அமைதியிலும் முன்னேற்றத்திலும் மீண்டும் கவனம்செலுத்தப்படவேண்டும்.

கிழக்காசியாவிலும் மேற்காசியாவிலும் தோன்றியுள்ள பதட்ட நிலையைப் போக்க அணிசேரா இயக்க நாடுகள் பாடுபடவேண்டும்.

தென் கிழக்காசியாவை அமைதி, சுதந்திரம், நடுநிலைமை பிராந்தியமாகக் கொள்வது நல்ல பயனை அளிக்கும்.

திரு. சுகார்ட்டோ தமக்கு அளிக்கப்பட்ட விருந்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், அணிசேரா நாடுகள் வல்லரசுகளின் வலையில் வீழ்ந்தால் அணிசேரா இயக்கத்தின் நோக்கமே இல்லாமல் போய்விடும். (இ)

பணயக்கைதிகள் விவகாரம்:

# அமெரிக்க துணை அமைச்சர் அல்ஜியர்ஸ் சென்றுள்ளார்

வாஷிங்டன், டிச. 2

ஈரானிலுள்ள அமெரிக்க பணயக்கைதிகளை விடுதலைசெய்வது குறித்து அமெரிக்க அரசின் விசேட செய்தியுடன் அமெரிக்க துணை வெளிநாட்டமைச்சர் திரு. வாரன்கிறிஸ்தோபர் அல்ஜீரியா சென்றுள்ளார்.

பணயக்கைதிகள் விவகாரம் குறித்து அமெரிக்காவுக்கும் ஈரானுக்குமிடையே அல்ஜீரியா மத்தியஸ்தம்வகித்து வருவதன்காரணமாக திரு. கிறிஸ்தோபர் அல்ஜீரிய அதிகாரிகளுடன் பேச்சுநடத்துவதற்காக அல்ஜியர்ஸ் சென்றுள்ளார். (இ)

# தொழிலாளர் உயர்வுக்காக பாடுபட்டவர் செல்லத்துரை

## அஞ்சலிக்கூட்டத்தில் புகழ்மாலை

(யாழ்ப்பாணம்)

'தமிழர் சிங்களவர் ஒற்றுமைக்காக பாடுபட்ட சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் போன்ற பெரியார்களின் வரிசையில் இடம்பெறவேண்டியவர் அமரர் செல்லத்துரை அவர் தமது வாழ்நாள் முழுவதும் தமிழர் சிங்களவர் ஒற்றுமைக்காகவும் தொழிலாளரின் ஒற்றுமைக்காகவும் அயராது உழைத்தார்.'

அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் சங்க யாழ் கிளை தலைவர் அமரர் க. செல்லத்துரையின் இறுதி அஞ்சலியின்போது தாய்ச்சங்கத் தலைவர் திரு. அமரதாசா மேற்கண்டவாறு கூறினார்.

### அஞ்சலிக்கூட்டம்

மாட்டின் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர்கள் திரு ஜெகன்நாதன். திரு. என். தர்மபாலன், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். சண்முகசுந்தரம், யாழ். முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன், உதவி முதல்வர் திரு. சேவியர், மாநகர சபை உறுப்பினர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கச்சேரி உத்தியோகத்தர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். அரசாங்க பொதுச்சேவை செயலாளர் திரு ஜோசப் தலைமையில் நடந்த அஞ்சலிக்கூட்டத்தில் திரு. அமரதாசா மேலும் கூறியதாவது,

### தொழிலாளர்களுக்காக தியாகம்செய்தார்

'எமது சங்கத்திலுள்ள 12'000 உறுப்பினர்களில்கணிசமான அளவு தமிழ் உறுப்பினர்களும் இருக்கின்றனர். இங்கு எமது சங்கத்தை வளர்ப்பதற்கு இவர் உழைத்தார். யாழ்ப்பாணத்தில் எங்கள் மகாநாட்டை நடத்தவேண்டும் என வலியுறுத்தி நடத்திமுடித்தார் இவரின் முடிவிற்கு இந்த அரசே காரணம். தொழிலாளர்களுக்காகவே வாழ்வை தியாகம்செய்துள்ளார் இவரது குடும்பத்திற்காக யாழ். கிளையினர் ஒரு நிதி ஆரம்பிக்கவேண்டும் தாய்ச்சங்கமும் அதற்கு உதவும் என்றார்.

தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். எம். கனகசுந்தரம் பேசுகையில் தமிழ்இனத்தின் முன்னேற்றத்திற்கும், தொழிலாளரின் விமோசனத்திற்கும் தமது வாழ்வை அர்ப்பணித்துள்ளார் என்று கூறினார். அவர் எதற்காக வாழ்ந்தாரோ, அது வருங்காலத்தில் நிறைவேறச் செய்வதே அவருக்குச் செய்யும் கைமாறாகும் என்றும் கூறினார்.

தொழிற்சங்கவாதி திரு. வி. ஏ. கந்தசாமி பேசுகையில் லட்சோபலட்சம் தொழிலாளரின் நன்மைக்காக, வாழ்வைத் தியாகம்செய்துள்ளார் என்றும் தொழிலாளர் ஒன்றுபட்டு அவரின் லட்சியத்தை நிறைவேற்றவேண்டுமென்றும் கூறினார்.

### சர்வதேச தொடர்புள்ளவர்

ஜாதிகருசங்க யாழ் கிளைத் தலைவர் திரு. குமாரசாமி பேசுகையில், இவரது சங்கம் சர்வதேச தொழிலாளர் தொடர்புடையதென்றும், அவர் சர்வதேசத்திற்குரியவர் என்று கூறினார் வேலைநீக்கம் செய்யப்பட்டதால் இதுவரை இவருடன் நால்வர் மரணமடைந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க தலைவர் திரு. நமசிவாயம் பேசுகையில்; இவரது தியாகத்தின் பின்னராவது ஆட்சியாளரின் கண்திறக்கவேண்டுமென்றும் கூறினார்.

### தேசியர்தியில் சிந்தித்தவர்

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ் கிளை தலைவர் திரு சு. கணேசு பேசுகையில், வாழ்நாள் முழுவதும் தொழிலாளர் நலனில் அக்கறைகொண்டு உழைத்தார் என்று கூறினார்.

வடபிரதேச தொழிற்சங்க நடவடிக்கைக்குழுபிரதிநிதிதிரு எஸ். விஜயானந்தன்பேசுகையில், அமரர் செல்லத்துரை தேசியர்தியில் சிந்தித்து வாழ்நாள் முழுவதும் அதற்காக உழைத்துவந்தார் என்றும், வேலைநிறுத்தத்தில் பெரும்பங்கெடுத்து சிற்றூழியர்களை கலந்துகொள்ளச்செய்தாரென்றும் கூறினார்.

வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த அவர் பெரியகடையில் தடக்கி விழுந்து ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் மயக்க நிலையில் இருந்து மயக்கம் தெளியாத நிலையிலே மரணமானார் என்றும் கூறினார்.

இறுதி ஊர்வலத்தில் பொருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

மீண்டும்

## கண்பார்வை கொடுக்கமுயற்சி

புதுடில்லி, டிச. 2

பீகாரில் பொலிசாரினால் கண்கள் குருடாக்கப்பட்ட விசாரணைக் கைதிகளுக்கு மீண்டும் பார்வை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகவலை உள்துறை அமைச்சர் திரு. ஸயில்சிங் நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

குருடாக்கப்பட்ட கைதிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக நான்கு டாக்டர்களைக்கொண்ட குழு பீகாருக்கு அனுப்பப்படும் என்றும் திரு. ஸயில்சிங் கூறினார். (இ)

## கலைவிழா

(உடுப்பிட்டி)

கரவெட்டி புனித லூர்த்து மாதா கன்னியர் மடப் பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா இன்று கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக நைஜீரியாவிலுள்ள மெற்றல் பொக்ஸ் கம்பனியின் பொறியியல் பகுதி ஆலோசகராகப் பணிபுரியும் திரு. வீ. இராஜேந்திரம் கலந்து கொள்கின்றார். (இ)

# நாவலரை நாம் ஏன் போற்றுகிறோம்

## பேராசிரியர் க. கலாசபதி கருத்து

(சண்டிக்குளி)

''சைவமும் தமிழும் தரணியில் தழைத்தோங்கி விளங்குவதற்குப் பாடுபட்டவர் என்பதில் மட்டும் ஆறுமுகநாவலரின் புகழ் தங்கியிருக்கவில்லை. இன, மத, பேதமின்றிப் பல சமூகத் தொண்டுகளைத் துணிவுடன் ஆற்றியதன் மூலம் இன்று அவர் தேசியத் தலைவர்களில் ஒருவராக இலங்கையர் அனைவராலும் போற்றப்படுகின்றார். இன்று நாவலரின் புகழை இலங்கையர் அனைவரும் அறிந்துகொள்வதற்கும், அவருக்குத் தபால்தலை வெளியிடுவதற்கும் இதுவே காரணமாகும்''

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர்க. கைலாசபதிசண்டிக்குளி சைவமகா சபையினர் நடாத்திய நாவலர்நினைவுதின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா சுச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் மண்டபத்தில், சைவமகா சபைத் தலைவர் திரு எஸ். செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

''நாவலரும் கல்விப்பணியும்'' என்ற தலைப்பில் உரையாற்றிய முன்னைநாள் பேராதனை வளாக விரிவுரையாளரும் பரியோவான்கல்லூரி ஆசிரியருமான திரு. வி. யுகபாலசிங்கம் உரையாற்றுகையில், நாவலரின் கல்விப்பணிகளை வரிசையாக எடுத்துரைப்பதிலும், அதனை கேட்டு வியப்பதிலும் அவரது இலட்சியம் முடிவதில்லை இளைய தலைமுறையினர் அந்த இலட்சியத்தின் வழி வாழ்ந்துகாட்டுவதில்தான் அவரது பணியின் முக்கியத்துவம் உணரப்படுகிறது'' என்றார்.

திரு. க. சொக்கலிங்கம் 'நாவலரும் நாமும்' என்ற பொருளில் பேசுகையில்; நாவலரின் உயர்ந்த இலட்சியங்கள் அனைத்தையும் எம்மால் கைக்கொள்ளவும், ஒழுகவும் முடியாவிட்டாலும் ஒரு சில லட்சியங்களையாவது நிச்சயம் கடைப்பிடித்தே தீரவேண்டும். சமூக ஒழுக்கம் என்பதே நாம் அவற்றுககுக் கொடுக்கும் முக்கியத்துவத்திலேதான் தங்கியுள்ளது'' என்றார்.

பண்ணிசை, பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பேராசிரியர் கைலாசபதி பரிசில்களைவழங்கினார்.

அச்சுவேலி ஆஸ்பத்திரியில்

# ரூ. 5,75,000 செலவில் பிரசவ விடுதி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் புதிய பிரசவ விடுதியொன்று 5,75,000ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான அத்திபாரக்கல்நாட்டுவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

சுகாதாரத் திணைக்களக் கணக்காளர் திரு. கே. தம்பையாவும் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரிடாக்டர்திருமதி ஆர். வி. தனேந்திரனும் அத்திபாரக் கல்லை நாட்டினர்.

இவ்வைபவத்தில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை டாக்டர் சி. இராசலிங்கம், வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர் திரு. இ. இராமசுவாமி, கிராமசேவை அலுவலர் க. ச. சோமசுந்தரம், திரு. இ. கணேசன், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூ. ச. பொதுமுகாமையாளர் திரு. கு. கணேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-அ

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு வைத்திய நிபுணர்கள்

## அமைச்சுப் பணிப்பாளரின் திடீர் விஜயத்தின் பலன்

(புலோலி)

பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குப் பிரசவ வைத்திய நிபுணர் ஒருவரும், சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரும், ஐந்து தாதிமார்களும் அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று சுகாதார அமைச்சுப் பணிப்பாளர் திரு. ஜேசுதாசன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சுப் பணிப்பாளர் திரு. ஜேசுதாசன் தலைமையில் உயரதிகாரிகள் குழுவொன்று கடந்தவாரம் பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலைக்குத் திடீர்விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தது.

க்குழுவினர் இவ்வைத்தியசாலையின் நடவடிக்கைகள் பற்றிப் பதில்மாவட்ட வைத்தியஅதிகாரி டாக்டர் யோகநாதனுடன் ஆராய்ந்ததுடன் வைத்தியசாலையின் சகல நடவடிக்கைகளையும் நேரிலும் பார்வையிட்டனர்

இதனையடுத்து இங்கு பிரசவ வைத்திய நிபுணரொருவரும், சத்திரசிகிச்சை நிபுணரொருவரும் ஐந்து தாதிகளும் விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளார்களெனவும், இங்கு நிறுவப்பட்டுள்ள எக்ஸ்-றே நிலயத்தைச் சிறப்பாக இயங்கச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் சுகாதார அமைச்சுப் பணிப்பாளர் திரு.ஜேசுதாசன் உறுதியளித்தார். (அ

ரூ. 16 லட்சம் செலவில்

# அல்வாயில் சீனித்தொழிற்சாலை விரைவில் திறக்கப்படும்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதி அல்வாய் தெற்கில் பதினறு லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ள சீனித் தொழிற்சாலையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுள்ளது. இச்சீனித் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு மக்கள் வங்கியில் இருந்து நிதி கடனுகப் பெறவுள்ளது.

துன்னாலை தெற்கு கறுக்காய், மடத்துவெளி, அல்வாய் தெற்கு, அல்வாய் மேற்கு, கரவெட்டி, கொத்தியவத்தை, மந்திகை, பொலிகண்டி, இலந்தைக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள சீவல் தொழிலாளர்களிடமிருந்து பதநீர் பெற்றுக் கொள்ளப்படும்

இச்சீனித்தொழிற்சாலையை ஆரம்பிப்பதன்மூலம் இப்பகுதியைச் சேர்ந்த பல இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறவுள்ளனர்.

இச்சீனித்தொழிற்சாலை அமையவுள்ள இடத்தைப் பருத்தித்துறை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், பொதுமுகாமையாளர் திரு. கே. மாணிக்கம் தலைமையில் கடந்தவாரம் சிரமதானமுறையில் துப்புரவு செய்தனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பூரணமாகத் தெய்வத் தன்மையடைவதே தான் மனிதனின் இலட்சியம்.

— சுவாமி சிவானந்தர்

## நமது நோக்கு

### முறியடிக்க வேண்டிய மோசடிகள்

நேற்றையதினம் யாழ்ப்பாணமாவட்ட அபிவிருத்தி பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். நிதி திரட்டுவதில் வெளிநாடுகள் உலகவங்கி போன்ற ஸ்தாபனங்கள் இதற்கெனப் பிரத்தியேகமான உதவி வழங்க முன்வர வேண்டுமென்பதும் நாம் குறிப்பிட்ட கருத்தாகும்.

அபிவிருத்தி என்ற சொல்லே நாற்றம்எடுக்குங் காலம் இந்நாட்டில் வந்துள்ளது. இதனை நாம் அறியாமலில்லை. இதனை வற்புறுத்தவே இங்கு நாம் முயல்கின்றோம்.

''ஆற்றிலே போகிறது அண்ணை குடி தம்பி குடி'' என்றபோக்கே இன்றைய பாரிய மகாவலித் திட்டத்தைப் பற்றி மக்கள் குறிப்பிடப் பொருத்தமாகவுள்ளது.

கிராமப்புற வீடுகளில் அல்லது பாதையோரத்தில் உள்ள தேநீர்க் கடைகளில் கிடைக்கும் தகவல்கள் இன்று பெருமளவில் செலவழியும் அரசின் நிதி தனி மனிதனின்மடிக்குள்போய்ச் சேருவதை தெரிவிக்கின்றன.

வேலைத்தலங்களில் உள்ளிடும் உரிமை பெற்ற உழவு யந்திர சாரதி, பண்டசாலைப் பொறுப்பாளர்போன்றவர்கள் இவ்வித மோசடி, விரயம் போன்ற செய்திகளை ஊரார் அறிய சாதாரணமாகப் பேசுவது சாமானிய சம்பவம்.

அரசின் அருப்பெரும் நோக்கம் நாட்டின் அத்தியாவசியமான தேவைகளில் உணவு, உடை, உறைவிடம் போன்றவை தன்னிறைவு காணுதலாகும்.

வருத்தியடையாத நாடுகளுக்கென உலகவங்கிதயாரித்த திட்டம் கிராமிய மக்களின் வறுமையை நீக்க வேண்டுமென்ற அடிப்படை நோக்கங்கொண்டது. அவ்வித நோக்கம், சமூனிலை சமத்துவ கட்டுப்பாடற்றதாக விருக்கவேண்டுமென்பதும் ஒரு நியந்தனையாகும்.

இவ்வித திட்டம் செயற்படும் பதினெறு வறிய நாடுகளின் இன்றைய நிலைமையை ஆராய்ந்த உலக விவசாய ஸ்தாபனம் கண்ட முடிவு எமது நாட்டுக்கு எச்சரிக்கையாக அமைய இது நல்லசந்தர்ப்பம். அந்த முடிவு என்ன.

கிராமியமக்களின்வறுமை நிலையில் எவ்வித மாற்றமும் தெரியவில்லை. அபிவிருத்தித் திட்டங்களில் ஏழைமக்கள் பங்கு கொண்டு பயன்பெற எந்தத் திட்டவேலையும் இடமளிக்கவில்லை. அது மட்டுமா?

கூட்டுறவு, கிராமிய, ஸ்தலஸ்தாபன நிர்வாகம், பசுமைப்புரட்சி, அரசாங்க கூட்டுத்தாபன, திணைக்கள நிர்வாகம் எதுவும் சாதாரண மக்களின் தேவைக்கு எட்டவில்லை எல்லா இடங்களிலும் உயர்மட்ட உத்தியோகத்தர்களே செல்வாக்கும், அதிகாரமும்செலுத்துகின்றனர். அவர்களின் ஆசி பெற்றவர்களின்பொக்கெற்றுகளில் பணம்போய்ச் சேர்கின்றது.

கிராமிய அபிவிருத்தியின் வெற்றி கிராமவாசிகள் தத்தம் சுயமுயற்சியால் தொழில் தேடிக்கொள்ளும் வசதியை ஏற்படுத்துவதில் தங்கியிருக்கின்றது.

இந்தஅளவு கோலைக் கண்டு இன்றைய அபிவிருத்தித் திட்டங்களில் நாம் காணும் முன்னேற்றம் அவசியம் ஆராயப்பட வேண்டியது. கோடிக்கணக்கில் கடனெடுத்து நாட்டின் வருங்காலத்தை ஒளிமயமாக்க அரசு எத்தனிக்க அதிகாரிகள் அவர்களின் ஏவலாளர்கள் முதலியோர் எவ்வாறு நடந்துகொள்கின்றனர்.

மீன்பிடித்துறையின் மோசடி கண்டுபிடிக்கப்பட்டது. போக்குவரத்துச்சபையின் பெருநட்டமெல்லாம் மக்கள் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது. பாற்சபையின் குறைபாடுகள் பாலின் விலையை உடனடியாக உயர்த்திவிட்டன.

மக்களின் பொறுமை அளவு கடந்து விட்டது. ஒன்றும் நடைபெறுது கேட்பாரில்லை என்ற விரக்தி திரண்டு ஆவேச நிலையை எட்டாமல் அரசு உடனடி நடவடிக்கையில் தீவிரமாகச் செயற்படவேண்டும்.

ஆட்சியின் இடைக்காலம் இது. ஓய்வுபெறும் நேரம் என்று ஆறி அமர்ந்திருக்காமல் களவு, மோசடி, துர்ப்பிரயோகம், நிர்வாக திறமையின்மை, சோம்பல் போன்ற உள்ளிருக்கும் வியாதிகளை நீக்கத் தேவையானல் ஊசிமருந்தோ, சத்திரசிகிச்சையோ எதுவானாலும் அதனை முகம்பாராமற் செய்தே தீரவேண்டும்.

இரகசியமாகச் சமாளிக்காமல் அம்பலப்படுத்தி தக்கதண்டனை விதித்தால் இனிப் பிறக்கவிருக்கும் வருடம் ஒரு புதிய நம்பிக்கையை வளர்க்கும்.

# இன்று திருவிழா

# புதுமைகள் நிகழ்த்திய புனித சவேரியார்

சிந்துதேசத்தின் அப்போஸ்தலர் என்ற சிறப்புநாமத்தால் அழைக்கப்படும் புனித சவேரியார் புதுமை செய்வதில் பிரபல்யம் வாய்ந்தவர். தமது தூய்மையும் தாழ்மையும் நிறைந்த வாழ்க்கையினால் பலரின் உள்ளங்களைக் கவர்ந்தவர். பீற்றர் வெல்கோ என்ற பிரபல்ய வியாபாரியார் புனித சவேரியாரின் எடுத்துக்காட்டான வாழ்க்கையால் கவரப்பட்டு அவரின் பக்தரானார். தமது அளப்பரிய செல்வத்திலிருந்து சவேரியாரின் தேவைகளுக்குத் தாராளமாக உதவி செய்தான். ஒருநாள் 'செஸ்' (Chess) விளையாட்டில் பீற்றர் வெல்கோ ஈடுபட்டிருந்தான் அதேநேரத்தில் புனித சவேரியார் வறிய குடும்பத்தில் பிறந்த ஒரு பிள்ளையை வாழவைப்பதற்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்காக அவனிடம் சென்றார் விளையாட்டில் மிகவும் ஆர்வமுடன் ஈடுபட்டிருந்த பீற்றர் வெல்கோ புனித சவேரியாரின் வருகையைப்பற்றி அக்கறை கொள்ளாது விளையாட்டில் தன்முழுக் கவனத்தையும் செலுத்தினான். சிறிதுநேரம் சென்றபின் சவேரியார் தமது தேவையைப் பீற்றர் வெல்கோவுக்குத் தெரியப்படுத்தினார். விளையாட்டை விட்டுச்செல்ல விருப்பமில்லாத பீற்றர் வெல்கோ துறவுகோல் கோர்வையைச் சவேரியாரிடம் கொடுத்து விருப்பிய பணத்தை எடுத்துச் செல்லும்படி அவரிடம் கேட்டுக்கொண்டார். விளையாட்டு முடிந்த பின் பீற்றர் வெல்கோ தனது பணப்பெட்டியைத் திறந்து புனித சவேரியார் எவ்வளவு பணம் எடுத்தார் என்பதை அறியச் சென்றான். பணப்பெட்டியில் தான் கணக்கு முடித்துவைத்தபணம் எடுக்கப்படாமல் இருப்பதைக் கண்டான். விளையாட்டில் அக்கறைகொண்டு புனித சவேரியாரைக் கவனிக்காதபடியால் அவர் தமது தேவைக்கேற்ற பணத்தை எடுக்கவில்லை என்று மனம் வருந்தினான்.

புனித சவேரியாரிடம் மன்னிப்புக்கோரச் சென்றான். என்ன ஆச்சரியம்! புனிதசவேரியார் தாம் விரும்பிய பணத்தைப் பணப்பெட்டியில் இருந்து எடுத்ததாகவும் வறிய பிள்ளையின் கலியாணத்துக்குத் தேவையான பணத்தைக் கொடுத்ததாகவும் கூறினார். அத்துடன் அப்பிரபல வியாபாரியின் பணப் பெட்டியில் இருந்து ஒருபோதும் பணம் குறையாதெனவும் அவனது தேவைக்கேற்றபணம் எப்போதும் கிடைக்குமெனவும் கூறினார். ஆனல் அவன் தினமும் அருந்தும் விலையுயர்ந்த சுவை நிறைந்த திராட்சைரசம் எப்போது கசப்பாகத் தோன்றுமோ அப்போது அவன் மரணம் அண்மித்துவிட்டதென்பதற்கு அது ஓர் அறிகுறி என்று அவனை எச்சரித்தார். புனிதர் கூறியவாறு அப்பிரபல்ய வியாபாரியின்வாழ்க்கையின் இறுதி அமைந்தது.



புனித சவேரியார் 16-ம் நூற்றாண்டில் (5(6—1552) வாழ்ந்தவர். கல்வி கலைக்கியாலங்களில் வல்லவராக விளங்கியவர். சோர்போன் சர்வகலாசாலையில் பிரபல்யம் வாய்ந்த பேராசிரியராக விளங்கியவர். விளையாட்டுத் துறையில் வல்லவராக விளங்கினார். உயரம் பாய்தலில் முழு ஸ்பானியாவிலே ஒப்பாரும் மிக்காருமில்லாது விளங்கினார். வாலிபப் பருவத்தில் பகட்டான உடை அணிந்து குதிரைச்சவாரியில் விருப்புடையவராக விளங்கினார். தமது எதிர்காலத்தைப் பற்றி இன்பமான கனவுகள் கண்டார். ஆனல் யேசுசபையின் ஸ்தாபகரான புனித இஞ்ஞாசியார் லொயலா அவர்களின் அருள்வாக்கு சவேரியாரின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது. ''மனித! உலகம் முழுவதையும் நீ ஆதாயமாக்கிக்கொண்டாலும் உன் ஆத்துமத்தை இழந்துவிட்டால் உனக்கு வரும் இலாபம் என்ன?'' என்ற வார்த்தைகள் அவரின் இருதயத்தைத் தொட்டன. ஆழமாக வேரூன்றி சிந்தனையைத் தூண்டிவிட்டன. உலகத்தைத் துறந்து குருவாக வேண்டுமென்ற உணர்வை எழுப்பிவிட்டன.

கிறிஸ்துவை உலக மக்கள் அனைவரும் அறியச்செய்ய வேண்டுமென்ற ஆவலினால் கீழைத் தேயங்களுக்குப் பயணமானார். தவக்கிரியைகள் பல புரிந்தார். பத்தாண்டு காலமாக கீழைத்தேய நாடுகளில் இறை அன்பைப் பரப்ப முயன்றார். ஆசிய நாடுகள் பலவற்றைத் தரிசித்தார். தமது போதனையின் மூலமும் சாதனையின் மூலமும் பலரை அருள்மறையில் சேர்த்தார். அருமற்ற அனைதயாக நோய்வாய்ப்பட்டு திருச்சிலுவையைக் கையிலேந்தி மரித்தார். புனித சவேரியாரின் திருவுடலை விரைவாக அழிந்து போகச்செய்யும் நோக்கத்துடன் சுண்ணாம்பினுள் புதைத்தனர். ஆனல் அத்திருமேனி எவ்வித அழிவும் இன்றி இருப்பதைக் கண்டு பூச்சியாக அவ்வுடலைக் கோவைப் பட்டணத்திற்குக் கொண்டுவந்தனர். பல நூற்றாண்டுகாலமாக எவ்வித அழிவுமின்றி அந்த புனித உடல் இருக்கும்படி இறைவன் சித்தம் கொண்டார்.

தவறாத வரங்களைத் தரும் புனித சவேரியாரின் பெயரால் உலகின் பல பாகங்களிலும் ஆலயங்கள் கட்டி எழுப்பப்பட்டுள்ளன. நமது மலைநாட்டத்திலும் நல்லூர், குளமங்கால், பற்றும் இடங்களிலுமுள்ள ஆலயங்களுக்கு புனிதரின் பக்தர்கள் ஏராளமாகச் சென்று அவரின் ஆசியைப் பெறுகின்றனர்.

-சுன்னுகப் பங்குத் தந்தை

## மக்கள் கருத்து

### இந்த வீதி திருந்துமா?

நெல்லியடிச் சந்தியிலிருந்து கொடிகாமம் செல்லும் பிரதான வீதி கன்பொல்லை மாதிரிக் கிராமச் சந்திவரையும் மிகவும் பயங்கரமான நிலையில் காட்சியளிக்கின்றது.

இந்த வீதியில் பாரிய குழிகளும் கற்களும் காணப்படுவதுடன் வெள்ளம் தேங்கிச் சேறுஞ் சகதியுமாக காட்சி அளிக்கிறது

இதனால் பஸ்வண்டிகள் மற்றும்வாகனங்களும், பொதுமக்களும் போக்குவரத்துச் செய்ய முடியாது இருப்பதுடன் அடிக்கடி விபத்தும் ஏற்பட்டுவருகின்றது.

அதிக போக்குவரத்தும், சனநெரிசலுமுள்ள இந்த வீதியின் அவல நிலை பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்காது அலட்சியமாக இருந்துவருவது மிகவும் வேதனைக்குரியதாகும்.

**எம். சுபேந்திரன்**

கொடிகாமம் வீதி,
சமவெட்டி.

### இனியாவது கவனிப்பார்களா?

எமது கிராம மக்களில் பெரும் பகுதியினர் நடமாடும் பிரதான வீதி கருவில் சரவணை வீதி புளியங்கூடல் சந்தியில் பெரும் பள்ளமாகவுள்ளது பெரும் நீர்தங்கிக்குளம் மாதிரியுள்ளது. இதைத் திருத்துமுகமாகப் பல கடிதங்களும் வேலையை நிறைவேற்றப் பொறியியலாளருக்கு அனுப்பியும் இன்றுவரையும் இப்பெருவீதி திருத்தப்படவில்லை இனியாவது பொறியிலாளர் கவனிப்பாரா!

**வ. போசராசா**

# தீராதவியாதிகளைத் தீர்க்கும் யோகாசனம்

## நூல்வெளியீட்டில் 'வித்தி'

(யாழ்ப்பாணம்)

தீராத வியாதிகளைத் தீர்க்க வல்லது யோகாசனம். சித்த வைத்தியத்தைத் தமிழலகுக்கு அளித்த சித்தர்கள் அதனுடன் தொடர்புடைய யோகாசனத்தையும் எமக்களித்தனர்.

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய அமுதசுரபி மண்டபத்தில் தெல்லிப்பளை யோகசபா நடாத்திய யோகாசன நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டு வைத்துப் பேசிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

சேர்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் மேற்படி நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. முன்னைநாள் யாழ். செயலக உதவியாளர் திரு இ. சபாரத்தினத்தினால் மேற்படி யோகாசனநூல் எழுதப்பட்டது.

தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் சமயம், இலக்கியம், முதலாய துறைகளுக்கு அரிய தொண்டாற்றினர். சமய அடிப்படையில் மன அடக்கம் வாக்கடக்கம், உடலடக்கம் ஆகியவற்றிற்காக யோகாசனப் பயிற்சிகளை மேற்கொள்ளலாயினர். அந்த யோகாசனப் பயிற்சி தீராத வியாதிகளைத் தீர்க்கக்கூடிய தாகவும் அமைந்துள்ளது என்றும் துணைவேந்தர் கூறினர்.

திரு. க கனகராசா பேசுகையில் நல்ல சரீர அமைப்புடனும் நோயற்றவாழ்வுடனும் வாழ யோகாசனப் பயிற்சியை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஒவ்வொரு ஆசனமும் செய்யும் முறை மூச்சுவிடும் முறை எவ்வளவு நேரம் செய்யவேண்டும் என்பவை பற்றி திரு. சபாரத்தினத்தால் எழுதப்பட்ட ''இலகு ஆசனப் பயிற்சிகள்'' என்ற இந்நூலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது என்றும் கூறினர்.

திரு து சீனிவாசகம் பேசுகையில், நோயினல் வாடும் மக்கள் தங்கள் நோய்களைக் குணப்படுத்த டாக்டர்களை நாடி அவர்களுக்கும் மருந்துக்கும் பெரும் தொகையான பணத்தைச் செலவு செய்தும் கூட நோய்மாறுது உடல்வருத்தத்துடன் மனவருத்தத்தை அடைகிறார்கள். யோகாசன மூலம் பலநோய்களைத் தீர்க்க முடியும். யோகாசனப் பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் நோய்கள் வராது தடுக்கவும் முடியும் மனதைச் சாந்திப்படுத்தவும் அமைதியாக வைத்திருக்கவும் யோகாசனப் பயிற்சி சிறந்த வழிவகுக்கும் என்றார். (சொ)

# தட்டுப்பாடின்றி யூரியா கிடைக்க நடவடிக்கை

(உடுப்பிட்டி)

சட்டைவேலி, நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதி விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி யூரியா உரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதிக அளவு யூரியா உரத்தைக் கொள்வனவு செய்திருக்கிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு

# மதுரைசெல்ல ஒரு கப்பலை ஏற்பாடு செய்து தருக

## கப்பல் போக்குவரத்து அமைச்சரிடம் யாழ். மேயர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மதுரையில் அடுத்தாண்டு ஜனவரிமாதம் நடைபெறும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு இங்கிருந்து தமிழறிஞர்களும் தமிழபிமானிகளும் செல்வதற்கு வசதிசெய்யுமுகமாக தமிழ்நாட்டுக்கு ஒரு கப்பலை விசேடமாக ஏற்பாடு செய்துதருமாறு யாழ். மேயர் திரு. இராஜா விஸ்வநாதன் கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியைக் கேட்டுள்ளார்.

திரு. விசுவநாதன் திரு அத்துலத் முதலிக்கு கப்பல் சேவை குறித்து எழுதியுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு:-

ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தின் சபாநாயகரும் எதிர்க்கட்சித்தலைவரும், தமிழ் அமைச்சரும், தமிழ்பேசும் உறுப்பினர்களும் இம் மாநாட்டில் கலந்து கொள்ள வசதிசெய்யுமுகமாக அடுத்த ஜனவரி மாதத்துக்கான பாராளுமன்றத் தொடர்க் கூட்டங்களை அம்மாதத்தின் இரண்டாம் வாரத்துக்குப் பின்போடப்பட வேண்டிய அளவுக்கு இத்தீவின் தமிழ்பேசும் மக்களுக்கு மேற்படி மகாநாடு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

ஆகவே தமிழறிஞர்களும், தமிழபிமானிகளும் இம்மகாநாட்டில் கலந்துகொள்ள வசதி செய்யுமுகமாக தங்கள் அமைச்சு விசேடமாக ஒரு கப்பலை தமிழ் நாட்டுக்குச் செல்வதற்கு அமர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜனவரியில் மாநாடு ஆரம்பமான பின்பே இச்சம்பவம் மீண்டும் தொடரவிருப்பதும் அறியப்பட்டதே.

மதுரை மாநாட்டில் கலந்து கொள்ள விரும்பும் அனைவராலும் அதிக தொகை செலவிட்டு விமானத்தில் பயணப்பட முடியாதென்பதோடு, விமானத்தில் இடங்களைப் பதிவு செய்வதிலும் பெரும் நெருக்கடி ஏற்பட இடமுண்டு.

எனவே சிக்கனமாகத் தமது மதுரை மாநாட்டுப் பயணத்தை முடித்துக் கொள்வதற்கு இத்தீவின் தமிழாராய்ச்சியாளர்களுக்கும், தமிழபிமானிகளுக்கும் ஒரு விசேட கப்பலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன்''

இக் கடிதத்தின் பிரதி ஒன்று எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (கு

## இலக்கிய நிகழ்ச்சி

(திருகோணமலை)

திருகோணமலை, முன்னேடிகள் கலை, இலக்கிய விமர்சகர் குழுவினரின் ''தூரத்து ஒலியங்கள்'' இலக்கிய நிகழ்ச்சி இம்மாதம் ஆறும் திகதி சனிக்கிழமை மாலை திருகோணமலை நகரமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஆனந்தவிகடன் பொன் விழாப்போட்டியில் பரிசுபெற்ற எழுத்தாளர் திரு. அருள். சுப்பிரமணியம் பாராட்டப்படுவார். திரு.வே தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் திருவாளர்கல கே. டானியல், வ. அ இராசரத்தினம், தில்லைமுகிலன், தா. பி சுப்பிரமணியம், ஷெல்லிதாசன் உட்படப் பல எழுத்தளர்கள் உரையாற்றுவர்

### ''வடக்கு கிழக்கில்

# 65 ரூபா கூலிகொடுக்க 375 முதலாளிகள் சம்மதம்''

(யாழ்ப்பாணம்)

''வடக்கு, கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த 375 சுருட்டு முதலாளிமார் 1000 சுருட்டுகளுக்கு 65 ரூபா கூலி கொடுக்க சம்மதம் தெரிவித்து நோட்டீஸ் அடித்துள்ள இவ்வேளையில் பதிவு இல்லாத தொழிற்சங்கங்கள் கூலியை குறைப்பதில் எடுக்கும் முயற்சியையிட்டு தொழிலாளர் விழிப்பாக இருக்கவேண்டும்''

தாவடியில் நடந்த இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் தலைமைதாங்கிப் பேசிய சங்கத் தலைவர் திரு. மா. க. முதலியார் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: வடக்கு கிழக்கு மட்டுமன்றி கொழும்பு, நீர்கொழும்பு முதலாளிமாரும் 65 ரூபா கொடுக்க சம்மதித்துள்ளனர். அரசு 70 ரூபாய் விசேடபடி. 1973ம் ஆண்டு அரசு 55 ரூபாய் விசேடபடிக்கு ஒப்பானதாகும். ஆகவே சுருட்டுத்தொழிலாளருக்கு 1000 சுருட்டுக்கு ரூபாய் 65 சம்பளமாகும். இதை எந்த முதலாளியாவது தட்டிக்கழிக்க சட்டங்கள் இடங்கொடாது. இந்த உயர்வை முதலாளிமார்கள்எந்தக்காலத்திலும் கொடுத்துத் தீரவேண்டும். ஆகவே நோட்டீஸ் அடியாத முதலாளிமார்கள் ரூபா 65 நோட்டீஸ் அடித்து வேலை வைப்பது நல்லது.

உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த அநேகமானோர் எமது சம்பளஉயர்வுக்கு சம்மதம் தெரிவித்து நோட்டீஸ்அடித்து வேலைவைத்துள்ளனர். மிகுதி முதலாளிமார்கள் இவ்வார இறுதிக்குள் நோட்டீஸ் அடித்து வேலைவைப்பார்கள் என எமதுசங்கம் எதிர்பார்க்கிறது.

ஆகவே ரூபாய் 65 நோட்டீஸ் அடியாதஉற்பத்தியாளர்களிடம் தொழிலாளர்கள் வேலைக்கு அமரவேண்டாம்என எமது சங்கம் வேண்டுகிறது.

தனதிகாரி க. விசுவலிங்கம் பேசுகையில், தொழிற்சாலையில் ஒற்றுமையாக இருந்தால் தான் எமது சங்கம் கூட்டிய ரூபா 65 பெற்றுத்தரமுடியும்.

திருவாளர்கள்: க. தங்கராசா, இ. யோகநாதன், அ. விவேகானந்தராசா, வ. ஆறுமுகம் உட்பட மற்றும் பலர் பேசினர். (க)

# சாவகச்சேரியில் மனிதஉரிமைகள் தினம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் இம்மாதம் 10ம் திகதி மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதென யாழ்நகரில் நடைபெற்ற அறவழிப்போராட்டக்குழுவின் நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 10ம் திகதி புதன்கிழமை நடைபெறும் மனிதஉரிமைகள்தினத்தில் சமூகங்களின் உரிமைகள் பேணப்படவேண்டும் என்பதை வலியுறுத்திப் பொதுக்கூட்டம் ஒன்று நடாத்துவது. அக்கூட்டத்தில் தமிழ்த் தலைவர்கள், சமூகத்தலைவர்கள், சமய தலைவர்கள் ஆகியோரை பங்குபற்றச்செல்வது என்றும் கூட்ட இறுதியில் ''குற்றவாளிக் கூண்டில் ஆலயமுகாமைகள்'' என்னும் விடயம்பற்றி வழக்காடுமன்றம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## மந்திகை வைத்தியசாலையின் அபிவிருத்தி

(புலோலி)

பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த மூன்று வருடகால அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிச் சுகாதார அமைச்சுஅதிகாரிகள் ஆராய்ந்தனர். இவ் வைத்தியசாலையின் கடந்த மூன்று வருட கால அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக சுகாதார அமைச்சின் சுகாதாரப் பிரசாரக்குழு பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. அகஸ்தீன் தலைமையில் வந்திருந்தது.

இங்கு வருகை தந்த இக்குழுவினர்மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் யோகநாதனிடம் இவ்வைத்தியசாலையின் குறைபாடுகள் தேவைகள் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி இக்குழுவினரிடம் விளக்கிக் கூறினர். இந்த வைத்தியசாலையின் மூன்று வருட அபிவிருத்திகள் பற்றி இக்குழுவினர் அறிக்கை திரட்டிச்சென்றனர்.

## வடமராட்சியில் மரநடுகை

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியான நாகர் கோவிலில் அரசாங்கத்தின் மரம் நாட்டும் திட்டத்தின்கீழ் கஜு, வேம்பு, சஞ்சீவி, மருது, இப்பில்இப்பில் ஆகிய மரங்கள் நாட்டப்பட்டு வருகின்றன.

இம்மரம் நாட்டும் இயக்கத்திற்கான சகல நடவடிக்கைகளையும் நாகர் கோவில் கிராம சேவை அலுவலர் திரு எஸ் சிவலிங்கம்மேற்கொண்டு வருகிறார்.

## லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை முதல் லட்சார்ச்சனை நடைபெற இருக்கிறது.

லட்சார்ச்சனை இம்மாதம் 13ம் திகதி நடைபெறும் சங்காபிஷேகத்துடனும் கணபதி ஹோமத்துடனும் பூர்த்தி அடையும்.

[illegible] வைத்தியநாத [illegible] தலைமையில் லட்சார்ச்சனை நடைபெறும்.

(இ)

## ''கலைஎழுச்சியின்மூலமே புத்துணர்ச்சி புதுயுகம் காணலாம்''

### நீதவான் மகேசன் உரை

(புலோலி)

''வாழ்க்கை என்னும் இயக்கத்தைக் கலாச்சாரமென்னும் ஓர் அங்கமாகத் தம்மைமாற்றி அமைப்பதன்மூலம் வாழ்க்கையின் ஆற்றலையும் வேகத்தையும் கவர்ச்சியையும் சிறப்புற பண்படுத்து அதிகரிக்கமுடியும் இந்த இரகசியத்தைப் பண்டைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்து இருந்தபடியாலேயே முழுமையான வாழ்க்கையைப் பொருளாக வைத்து வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்துள்ளனர்''.

இவ்வாறு மேலைப்புலோலி மாதர் சங்கத்தின் பொருட்காட்சிலும் கலைவிழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்து உரையாற்றியபருத்தித்துறை நீதவான் திரு கே. எஸ். மகேசன் குறிப்பிட்டார். மேலைப்புலோலி தம்பசெட்டி மெதடிஸ் மிஷன் தமிழ்கலவன் பாடசாலை மண்டபத்தில் சங்கத்தலைவி திருமதி மகேஸ்வரி பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிலே பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. சோ. இராசநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தொடர்ந்து பேசிய திரு. மகேசன் குறிப்பிட்டதாவது.

கலை எழுச்சியின் மூலமே எமது சுகவாழ்விலும், புறவாழ்விலும் புத்துணர்ச்சி பெற்றுப் புதுயுகம் காண முடியும். ஜனநாயக உரிமைகள் வசதிப்படும்போதெல்லாம் தமிழ்மக்கள் அவற்றை நன்கு பயன்படுத்தித் தமிழ்க் கலைகளையும், பாரம்பரியங்களையும் வளர்க்க முன்வரவேண்டும்.

எமது இல்லங்களையும், கல்விகூடங்களையும் கலைக் கோவில்களாக மாற்றியமைக்கும்போது எமது கலை, கலாச்சாரங்களைப் பேணி வளர்த்து மேம்படுத்த முடியும்.

தமிழ் மக்களின் பாரம்பரியப் பெருமைகள் என்றும் நிலைத்து நிற்பன என்ற காரணத்தாலேயே தமிழ்மொழி உலகிலேயே விரும்பிப் போற்றப்பட்டு வருகின்றது என்றார்.

## பொலிஸ் அதிகாரி இடமாற்றம்

(மாவிட்டபுரம்)

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி. பொன். [illegible]கணேந்திரன் ஜனவரி மாதத்திலிருந்து அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாக கடமையாற்றிய பி. லயனல் மாத்தறை பொலிஸ் நிலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

### உதவிப் பொலிஸ் அதிபர் இடமாற்றம்

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ்அதிபர் திரு. லூஷன் விஜயக்கோன் ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவு உதவிப் பொலிஸ் அதிபராக இவர் நியமனம் பெற்றுச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அபிவிருத்தி வேலைகளை பூர்த்தி செய்க

(புலோலி)

பருத்தித்துறைத்தொகுதியின் அபிவிருத்திகருதி பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை இம்மாத முடிவிற்குள் பூர்த்தியாக்கிவிட வேண்டுமென்று பருத்தித்துறைஎம்.பி. திரு. கே. துரைரத்தினம் தெரிவித்துள்ளார்

அத்துடன் இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதியினைப்பயன்படுத்தி வேலைகளைப் பூர்த்தி செய்யாத நிறுவனங்களுக்கு அடுத்தவருடம் நிதி ஒதுக்கீ செய்யப்படமாட்டாதென்றும் அவர் தெரிவித்தார்.

## கிரிக்கட் சங்க நிர்வாகிகள்

(அரியாலை)

யாழ்.மாவட்ட கிரிக்கட் சங்கத்தின்வருடாந்தக்கூட்டம் யாழ்சென்ற்.பற்றிக்ஸ்கல்லூரி பழைய மாணவர் மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக வைத்திய கலாநிதி யே.பி.சி பிலிப்ஸ்ம், செயலாளராக சற்.சிங்கராயர்,உப செயலாளராக கே எஸ் ஈ சேவியரும், பொருளாளராக கே பூபாலசிங்கமும், நிர்வாக உறுப்பினராக டானியல், ஜோஜ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நியமன அங்கத்தவர்கள்

(மன்னார்)

மன்னர் மாவட்டத்திலுள்ள 10 கமநல சேவை நிலயங்களுக்கு மொத்தம் 132 பேர் நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்,

நானாட்டான், முருங்கன், மன்னார், உயிலங்குளம், இலுப்பைக் கடவை, சிலாவத்துறை, விடத்தல்தீவு, பொற்கேணி, பாலம்பிட்டி, ஆட்காட்டிவெளி ஆகிய 10 கமநல சேவை நிலயங்களிலேயே 132பேர் நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கூட்டுறவுத்துறையில் மகளிர் பங்கு

(மாவிட்டபுரம்)

''கூட்டுறவுத் துறையில் மகளிர் பங்கு இன்றியமையாதது. ஆண்கள் 60வீதமும். பெண்கள் 40 வீதமுமாக இணைந்து செயல்பட்டால் கூட்டுறவு இயக்கம்மறுமலர்ச்சியடைவது உறுதி''.

இவ்வாறு சர்வதேச கூட்டுறவு ஒன்றிய இயக்குனரும்' முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளருமான திரு. ஆர். பி இராஜகுரு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் சிறப்பு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

சங்கத்தலைவர் திரு' எஸ். சிவமகாராஜா தலைமையில் நடந்த இச்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

கூட்டுறவு இயக்கம் அரசின் கையிலேயே இருக்கிறது என மக்கள் தவருக நினைக்கிறார்கள். இது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதால் இது ஓர் மக்கள் இயக்கமாகும். ஆகவே மக்கள்சொத்தானகூட்டுறவை வளர்க்க நாம் உழைக்கவேண்டும். மூன்ருவது உலக நாடுகளில் கூட்டுறவு இயக்கம் இருள்சூழ்ந்தநிலையில் உள்ளது என்றார்.

## இயக்குநர்சபைத் தலைவர்

(மன்னார்)

திரு. ஜே. சி பெனடிக்ற் மன்னார் பல நோ. கூ. சங்க இயக்குநர்சபைத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவராக ஜனப் ஏ. காதர் தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீரைமுறையாகப் பாவிக்காவிட்டால் யாழ்.குடாநாடு வனாந்தரமாகும்!

## தொழில் திணைக்களக் கருத்தரங்கில் தகவல்

(புலோலி நிருபர்)

''யாழ். மாவட்டத்தில் நிலத்திற்குள் கீழ் எண்பதுஅடி ஆழத்திலிருந்த உவ நீர் தற்போது எழுபத்திரண்டு அடி வரைக்கும் வந்துவிட்டதாக நீரியல் உயிரியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். எனவே நாம் நீரைத் தகுந்தமுறையில் பயன்படுத்தவேண்டும். தவறினால் யாழ். மாவட்டத்திலுள்ள கிணறுகளிலுள்ள நன்னீர் வெகுவிரைவில் உவர்நீராகி விடும் அபாயம் ஏற்படும். இயற்கையன்னையால் வழங்கப்படும் மழைநீரை வீணே கடலுக்குச் செல்லவிடாது தடுத்துத் தேக்கி வைத்து அதன் மூலம் பயனைப்பெற வேண்டும். இவற்றினை நன்கு கவனிக்காது விட்டால் யாழ். குடாநாடு வனாந்தரமாகிவிடக்கூடிய பேராபத்து ஏற்படவிருக்கின்றது''.

இவ்வாறு யாழ். தொழிற் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட சனத்தொகையும்குடும்பத்திட்டமும் பற்றிய கருத்தரங்கில் 'சமூக பொருளாதாரப் பிரச்னைகள்' என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்கிய பருத்தித்துறைஉதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார். யாழ். உதவித்தொழில் ஆணையாளர் திரு. மகாசிவத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இக் கருத்தரங்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்றது. தொடர்ந்து கருத்துரை வழங்கிய உதவி அரசாங்க அதிபர் வேலும்மயிலும் குறிப்பிட்டதாவது:

இன்று சனத்தொகைப் பெருக்கம் மிகவேகமாக அதிகரித்துச் செல்வதனால் எமது சமூக, பொருளாதார அபிவிருத்தித்திட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்தில் எட்டுஇலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். சனத்தொகை பெருகிக்கொண்டே வருகின்றது. ஆனால் நிலப்பரப்போ பெருகவில்லை. இதனாலே இருக்கும் நிலங்களே துண்டாடப்பட்டு விவசாய பொருளாதார நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இந் நிலையிலே சனத்தொகைப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது மிக முக்கியமாகின்றது.

உணவு உற்பத்தியில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். எமது விவசாயிகள் மாற்றுப் பயிர்ச்செய்கை, நவீன விவசாயத் திட்டம் என்பனவற்றின் மூலம் உணவுஉற்பத்தியில் கூடிய விளைதிறனைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் பெருகிவரும் சனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப எமதுஉணவுற்பத்தியை ஓரளவு பெற்றுக்கொள்ள வழியேற்படும்.

### 46 கோடி ரூபாவில் அபிவிருத்தி

யாழ். மாவட்டம் உலகவங்கியின் உதவியுடன் 46 கோடி ரூபா செலவில அபிவிருத்தி செய்யப்படவுள்ளது இவ்வபிவிருத்தித் திட்டத்திற்கான அறிக்கையும் யாழ்.செயலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியின் குடிதண்ணீர்ப் பிரச்னையைப் போக்குமுகமாக மணற்காட்டிலிருந்து பருத்தித்துறைக்கு அமெரிக்க உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள குழாய்நீர் விநியோகத்திட்டம் 1981ம் ஆண்டிற்குள் பூர்த்தியாகிவிடும். முதலில் பருத்தித்துறைப்பகுதிக்கு வழங்கப்படவுள்ள இக்குழாய்நீர் விநியோகத்திட்டம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு அல்வாய், திக்கம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை தொண்டமானாறு வரைக்கும் நீடிக்கப்படும்.

தொண்டமானாறுநன்னேரித்திட்டம் உலகவங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம்மேற்கொள்ளவுள்ளது. இந் நன்னேரித்திட்டம்வெற்றியடையுமானால் யாழ். குடாநாடு செல்வம் கொழிக்கும் பூமியாகுமென்பது நிச்சயமாகும்.

கிளிநொச்சி, பரந்தன் போன்ற பகுதிகளில் பசும்புற்றரைகளை வளர்த்துக் கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தரிசாக இருக்கும் நிலங்களில் அதிக மரங்களை நாட்டி கால்நடை உணவு வகைகளை உற்பத்தி செய்வதுடன் எமது இயற்கை வளங்களையும் நாம் பேணிக் கொள்ளவேண்டும்.

இப்பகுதி மூலவளங்களைக் கொண்டு கைத்தொழிற்துறைகளை அபிவிருத்தியடையச் செய்வதற்கான திட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் எமது பகுதிகளில் பல இளைஞர்களும் யுவதிகளும் வேலைவாய்ப்பைப் பெறவசதியேற்படும்.

கிராம அபிவிருத்திச்சங்கங்கள் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொது ஸ்தாபனங்கள் தத்தமது பகுதி மூலவளங்களைக் கொண்டு மேற்கொள்ளக் கூடிய தொழில் துறைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் கடனுதவிகளை அத்தொழில்துறைகளை ஆரம்பிப்பதற்கு வழங்கும்.

சனத்தொகை பெருகிக் கொண்டு போகும்போது வீடற்றபிரச்சினையும் பெருகிக் கொண்டே போகின்றது. மக்களின் வீடில்லப்பிரச்னையை நீக்குவதற்காக எமது பிரதமரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசா வீடமைப்பு திட்டங்களை உருவாக்கியுள்ளார். தொகுதிகள் தோறும் வீடுகள் அமைக்கப்பட்டு வீடற்றவர்களுக்கு வழங்கும் திட்டத்திற்கமைய 83-ம் ஆண்டுக்குமுன்னர் ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலும் 600 வீடுகள் அமைக்கப்படவுள்ளன இவ்வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு இப்பகுதியில் தகுதியான இடங்களை எனது கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதற்குரிய நடவடிக்கைகளை நான் மேற்கொள்வேன்.

இக்கருத்தரங்கில் யாழ். தொழிற்திணைக்களத் தொழில திகாரிகளான திரு. கே. சிவப்பிரகாசம் திரு. எஸ். தர்மலிங்கம் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பி. பாலகிருஷ்ணன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினார்கள். (அ)

---

எமது உரிமைகளை வெல்ல

# சொந்தக் கால்களிலேயே நாம் நிற்க வேண்டும்

## 'எங்கள்குரல்' பத்திரிகை வெளியீட்டில் உரை

(அரியாலை)

எமது சொந்தக் கால்களிலே நாம் நின்று எமது உரிமைகளை வென்றெடுக்கவேண்டும். மற்றவர்களின் பின்னால் செல்வதால் எமது இழந்த உரிமைகளை நாம் வென்றெடுக்கமுடியாது. தாழ்த்தப்பட்ட மக்களிடையே இன்று செயல்படும் சகல இயக்கங்களும், தெங்கு-பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களும் ஸ்தாபன ரீதியாக ஒன்றிணைந்து நமது உரிமைகளை வென்றெடுக்க முயற்சி செய்யவேண்டிய காலகட்டம் இதுவாகும்.

இவ்வாறு வெகுஜன இயக்க முன்னாள் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம், சன்மார்க்க வாலிபர் சங்க மண்டபத்தில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஆதரவில் நடைபெற்ற ''எங்கள் குரல்'' பத்திரிகை வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்,

மகாசபைத் தலைவர் திரு. எம். வடிவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நாகரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:,

எதிர்வரும் காலத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உரிமை மறுக்கப்பட்டவர்களாக வாழும் சிறுபான்மைத் தமிழ்மக்களின் வாக்குகள் முக்கிய இடத்தைப் பெறவிருக்கின்றன எமக்காக முன்பு குரல் எழுப்பியவர்கள் எமக்கென ஒரு கட்சியை நாம் அமைப்பதை விரும்புகிறார்களில்லை சமூக விடுதலைக்காக உழைத்த நமது முன்னோர்கள் 50 வருடங்களுக்கு முன்னதாகவே எமது உரிமைகளை வென்றெடுக்க..... எமது பிரச்னைகளை மக்கள் மத்தியில் வைக்க.....சிறுபான்மைத் தமிழ் மக்களைச் சிந்திக்க வைக்க— பத்திரிகைகளை நடாத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து பல சமூக ஸ்தாபனங்களும் தமக்கெனப் பத்திரிகைகளை வெளியிட்டு வந்துள்ளன. சிறுபான்மைத் தமிழ் மக்களைச் சிந்திக்க வைக்கும் வகையில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை எங்கள் குரல் பத்திரிகையை வெளியிட்டிருப்பது இன்றைய நிலையில மிக மிக முக்கியமானதாகும்.

'எங்கள் குரல்' பத்திரிகையின் முதற்பிரதியை மகாசபை உப தலைவர் திரு. சிற்றம்பலம், துரை. சுந்தரமூர்த்தியிடம்கையளித்து விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

மகாசபைப் பொதுச் செயலாளர் திரு. பி. ஜே. அன்ரனி பேசுகையில் 1977ம் ஆண்டில் தமிழர் மத்தியிலே சாதிப்பிரச்சனை இல்லை என்று கூறியவர்கள் சிறுபான்மைத்தமிழரில் ஒருவரை பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்ததன் மூலம் சாதி ஒழிந்து விட்டது என்று கூறி இன்று சாதிப்பிரசனைக்காக குரல் கொடுக்கிறோம் என்று கூறிவருகிறார்கள் எமது பிரச்சனைகள் எம்மாலே தான் தீர்க்கப்படவேண்டும் சாதிப் பிரச்சனையைத் தீர்க்க சாதிக்கொரு சங்கம் வைத்திருப்போர் விடுகிறார்களில்லை என்று கூப்பாடு போடும் இவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சாதிப்பிரச்னையை முற்றாக நீக்க இதுவரைஎடுத்த நடவடிக்கைகள் என்ன? அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று தீண்டாமைக் கொடுமையிலிருந்து நாம் பூரண விடுதலை பெற மற்றவர்களை நாம் நம்பியிராது நாமே போராட வேண்டும். எமது விடுதலைக்காக குரல் கொடுக்க எமக்கே உரிமையுண்டு. மற்றவர்கள் எல்லாவற்றையும் செய்வார்கள் என்று நாம் நம்பியிருந்த காலம்போய் விட்டது. எமது விடுதலையின் சின்னமாக எமக்குச் சாதியின் பேரால் இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துகூற தீண்டாமைக்கு எதிராக நாம் எதிர்காலத்தில் நடாத்தவிருக்கும் போராட்டங்களுக்கு மக்களிடேயே ஆதரவு திரட்ட உள்ளதை உள்ளபடி எடுத்துக்கூறும் சாதனமாக எங்கள் குரல் விளங்கும் என்று குறிப்பிட்டார்.

தமிழ் பௌத்த சங்கத்தலைவர் திரு. எம். வைரமுத்து உட்பட இன்னும் அநேகர் ஆய்வுரை நிகழ்த்தினார்கள். (அ)

---

# இலவச பாடப்புத்தகங்கள்

(மட்டுவில்)

சாவகச்சேரி கல்விவட்டாரப் பாடசாலைகளின் 1981ம் ஆண்டுக்கான பாடசாலைப் புத்தகங்களை கல்வி இலாகா சாவகச்சேரி வட்டாரக் கல்வியதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ளது.

அடுத்த ஆண்டில் சாவகச்சேரி வட்டாரப் பாடசாலைகளுக்காக 19,000 பாடப்புத்தகங்கள் வந்துசேர்ந்துள்ளன.

---

# நத்தார்விழா

(அரியாலை)

யாழ் பரியோவான் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த நத்தார் விழா கடந்த திங்கள் மிக விமரிசையாக நடைபெற்றது.

விழாவிற்கு பிரதம அதிதிகளாக யாழ்ப்பாணம் ஆர்ச் டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோர் சிங்டன் அடிகளார், அருட்திரு யே. சர்வானந்தம் அடிகளார் கல்லூரி அதிபர் திரு சி. ஈ. ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கிறிஸ்மஸ் பாடங்களும் கிறிஸ்துவின் பிறப்புப்பற்றிய நாடகமும் இவ்விழாவில் இடம் பெற்றன.

கிறிஸ்மஸ் தாத்தா பிள்ளைகளுக்கு நத்தார் பரிசில்களை வழங்கினர். இறுதியில் மாணவர்களுக்கு ஐஸ்கிறீமும் வழங்கப்பட்டது.

---

# பலாலி ஆசிரிய கலாசாலை சஞ்சிகைவெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய பயிற்சிக் கல்லூரியினரின் ''கலாவதி'' சஞ்சிகை வெளியீட்டுவிழா அண்மையில் மமற்படி கல்லூரியன் சினிமா மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு இ கனகலிங்கம் தலைமை வகித்தார்,

விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் சஞ்சிகையின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

திருமதி வசந்தா வைத்தியநாதனும்; திரு. ஆ சிவநேசசெல்வனும் நூலாய்வு செய்தனர்.

---

# பஸ் - சைக்கிள் விபத்து, சாரதிக்கு ரூ. 3000 பிணை!

(புலோலி)

''எதிரேவந்த இருபஸ் வண்டிகள் றோட்டில் நின்றபோது சைக்கிளில் வந்த இறந்தவரும் நானும் பஸ்ஸை இடது பக்கத்தால முந்திச் சென்றபோது கல்லுக்கும்பி ஒன்றில் சைக்கிள் ஏறியதால் இறந்தவர் பஸ்பக்கமும் நான் மறுபக்கமும் விழுந்தோம் அப்போது இறந்தவர் பஸ்ஸினுள் அகப்பட்டுக்கொண்டார்.

இவ்வாறு புலோலி சாரையடியில் பஸ்- சைக்கிள் விபத்தில் இறந்த புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க 'புலோலிசினிமாஸ்' தியேட்டரில் கடமையாற்றிய வேலுப்பிள்ளை யோகசுந்தரம் (மணியம்) என்பவரின் மரண விசாரணையின் போது சைக்கிளை ஓடிவந்த இளைஞரான றஞ்சன் என்பவர் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார், இவரது மரணம் சம்பந்தமான விசாரணையைப் பருத்தித்துறைப் பதில் நீதவான் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

பிரேதபரிசோதனையை மேற்கொண்ட டாக்டர் எலிததுமார் சாட்சியமளிக்கையில் இறந்தவருக்கு ஐந்து விலா எலும்புகள் முறிவடைந்ததுடன் காதிலும் சமுத்திலும் காயங்கள் காணப்படுகின்றன. மண்டை உடைந்துள்ளது மூளை சிதைவடைந்துள்ளது. இவற்றினால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலேயே இவருக்கு மரணம் சம்பவித்துள்ளது'' என்றார்.

இன்னும் பலரின் சாட்சியங்களையடுத்து விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தபதில் நீதவான் பஸ் சாரதியான இராசா இராசையா என்பவரை 3,000 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். (அ)

---

# மன்னாருக்கு சிறிமாவை அழைக்க முடிவு

(மன்னார்)

முன்னாள் பிரதம மந்திரியும் சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி. சிறிமா பண்டாரநாயக்காவை மன்னாருக்கு அழைத்து வரவேற்பு அளிக்க சுதந்திரக்கட்சியின் மன்னார் மாவட்ட மத்திய அமைப்பு தீர்மானித்துள்ளது.

அமைப்பின் தலைவர் ஜனாப் பீ. ஏ. றஸாக் தலைமையில் முருங்கன் அமைப்புச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் உத்தியோகபூர்வமாக மத்திய அமைப்பு அமைக்கப்பட்ட பின்னரும் எதிர்காலத்திலும் மன்னார் மாவட்டத்தில் சுதந்திரக்கட்சி அமைப்பு பிரசாரம் போன்ற சகல பணிகளுக்கும் மத்திய அமைப்பே பொறுப்பானதாக இருக்கும் எனவும் கட்சி மேலிடத்தால் இதன் பின்னர் தனிப்பட்ட அமைப்பாளர்களோ அல்லது மத்திய அமைப்புடன் சம்பந்தப்படாத வேறு கிளைகளோ இல்லை எனவும் சகலருக்கும் தெரியப்படுத்துவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்நகர்)
முத்துராமன், ஜெய்சித்ரா, ஸ்ரீகாந்த் நடித்த
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
இன்ஸ்பெக்டர் மனைவி
From 5th
Mighty Himalayan Man

சடைடிசி வாரம்
வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
Black Sunday

SANTHI (JAFFNA) DAILY 5 SHOWS
10-00, 1-00, 4-00, 7-00 & 10-00
—Patrons Please Note! Altered Show Times—
★ CHARLES BRONSON ★ JIM BROWN
★ CLINT WALKER ★ TELLY SAVALAS
in
THE DIRTY DOZEN
ACTION PACKED COLOR MOVIE

வின்ஸர் (யாழ்நகர்)
Daily at 10-30 A.M., 2-00, 4-30, 7-00 & 9-30 P.M. only
★ BARRY NEWMAN ★ SUZY KENDALL
in
FEAR IS THE KEY
Scope-Color Thrill & Action

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 4வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரே வானம் ஒரே பூமி
(வண்ணக்கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00 9-30
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்





சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)


ஈழநாடு
வெற்றிக்கிண்ணை
உதைபந்தாட்டம்

# 56 கழகங்கள் மோதுகின்றன

## டிச. 6-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யங்ஸ்ரேயல் விளையாட்டுக் கழகத்தின் 12-வது நிறைவு விழாவையொட்டி ஈழநாடு வெற்றிக் கிண்ணத்திற்காகவும், ஏனைய 11 விருதுகளுக்காகவும் வடபகுதியில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தப்படும் சுற்றுப் போட்டி இம்மாதம் 6-ம் திகதி காங்கேசன்துறைபட்டினசபை மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

56 கழகங்கள்பங்குபற்றும்இச் சுற்றுப்போட்டியில் 1-ம்பிரிவு 7 பேர்கொண்ட போட்டியில் 20 கோஷ்டிகளும், 1-ம் பிரிவு 11 பேர்கொண்ட போட்டியில் 12 கழகங்களும், 2ம் பிரிவில் 14 கழகங்களும், 3-ம் பிரிவில் 10 கழகங்களும் பங்குபற்ற உள்ளன. 6-ம் திகதி முதல் தைப்பொங்கல் தினம் வரை நடைபெற இருக்கும் இச் சுற்றுப்போட்டியில் தினமும் இரு போட்டிகள் நடைபெறும். இச் சுற்றுப்போட்டியை சிறப்புடன் நடாத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளை யங்ஸ்ரேயல் விளையாட்டுக்கழக நிர்வாகசபை செய்துவருகிறது.

1-ம் பிரிவின் 7பேர்கொண்ட போட்டியில் காங்கேசன்துறை சீமெந்து பொழுதுபோக்கு வி. க., வல்வை நெடியகாடு வி. க., புத்தூர் சிறி விக்னேஸ்வரா வி. க., யாழ். நொதேன் வி. க., யாழ். முஸ்லிம் லீக் வி. க., வல்வை வி. க. யங் மகாஜனன்ஸ் வி.க., மாதகல்ஐக்கிய வி.க., வல்வைஉதயசூரியன் வி. க., சுன்னாகம் ஸ்ரேயல் வி. க., மாதகல் செல்வா வி. க., சிறுவிளான் ஞானோதயா வி. க. இளவாலை உதயசூரியன் வி. க., காங்கேசன் நடேஸ்வரன்ஸ் வி. க., தையிட்டி பராசக்தி வி. க., கைதடி மின்னல் வி. க., காங்கேசன் பிறன்ஸ், வி. க., மல்லாகம் சிறிமுருகன் வி. க, வசாவிளான் ஞான வயிரவர் வி. க. ஆகியன பங்குபற்றுகின்றன.

11 பேர் கொண்ட போட்டியில்: வல்வை நெடியகாடு வி. க., சிறுவிளான் ஞானோதயா வி. க., காங்கேசன் சீமெந்து பொ. போ. வி. க, புத்தூர் விக்னேஸ்வரா வி.க., வல்வை வி. க., இளவாலை உதயசூரியன் வி.க.,மல்லாகம் சிறிமுருகன் வி. க., யாழ். நொதேன் ஸ்போட்ஸ் வி. க., சுன்னாகம் ஸ்ரேயல் வி. க., யங் மகாஜனன்ஸ்வி.க. காங்கேசன்துறை பிறன்ஸ் வி. க, மாதகல் செல்வா வி. க. ஆகியன விளையாடும்;

இரண்டாம் பிரிவில்; ஊறணி புனித அந்தோனியார் வி. க., அளவை ஐக்கிய, இளைஞர் வி. க., காங்கேசன் பிறன்ஸ் வி. க, மாதகல் செல்வா வி. க., தையிட்டி பராசக்தி வி. க, வல்வை உதயசூரியன் வி.க., மாவிட்டபுரம் ஸ்ரார் கழகமும், தெல்லிப்பளை வெண்ணிலா வி. க., காங்கேசன்துறை யங் ஸ்ரார் வி. க., மாதகல் ஐக்கிய வி. க. காங்கேசன் வொன்றெஸ்ட் வி.க., வல்வை வி.க., வசாவிளான் ஒலிம்பிக் வி. க, காங்கேசன் நடேஸ்வரன் ஆகியனவும்-

3-ம் பிரிவில்: ஊறணி புனித அந்தோனியார் வி க, வல்வை வி க, மாதகல் ஐக்கிய வி க, காங்கேசன்துறை வொன்றெஸ்ட் வி. க, சிறுவிளான் ஞானோதயா வி. க., தெல்லிப்பளை வெண்ணிலா வி.க., மாதகல் செல்வா வி. க., தையிட்டி பராசக்தி வி. க., வல்வை உதயசூரியன் வி. க., காங்கேசன் பிறன்ஸ் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன. (இ)

# 11 திருட்டுச் சம்பவங்கள்: மூவர் டிச. 10வரை றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் இடம்பெற்ற 11 திருட்டுச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படும் மூன்று இளைஞர்கள் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது இம்மாதம் 10ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

காங்கேசன்துறை சந்தை வீதியைச் சேர்ந்த குமாரசாமி என்பவரது கடை இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டு சுமார் 2000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டது குறித்து விசாரணையிலீடுபட்ட காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் காங்கேசன்துறையைச்சேர்ந்த செல்லத்துரை சிவசுப்பிரமணியம், செல்லத்துரை பாலசுப்பிரமணியம், எஸ். வீரசிங்கம் ஆகிய மூவரைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர்.

அச்சமயம் காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கருகிலுள்ள பாடசாலையில் பிஸ்கட் களவாடியது உட்பட இப்பகுதியில் இடம்பெற்ற பல திருட்டுக்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பதாக தெரியவந்தது. சுமார் 11 திருட்டுக்களில் இவர்கள் தொடர்பு கொண்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இம்மூவரையும் காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தசமயம் இம்மாதம் 10ம் திகதிவரை இவர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் உத்தரவிட்டார்.

## சாரணர் சங்கம் மரம் நாட்டும் இயக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் மரம் நாட்டும் இயக்கம் இன்று காலை ஆரம்பித்து வைக்கப்படும். இவ் வியக்கத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைச் சாரணர்களில் ஒரு பகுதியினர் பங்குகொள்வர்.

சுமார் 1500 சவுக்கு, சஞ்சீவி, தேக்கு, இப்பில்-இப்பில்; கன்றுகளை இவ் வியக்கத்திற்கு தொழிலதிபர் திரு. க. கனகராஜா தமது தோட்டப்பண்ணையின் கன்றுகளை இலவசமாக வழங்குவதுடன், வைபவத்தில் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

இவ் வைபவத்தையொட்டி யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள யாழ். மண்டபத்தில் பொதுக் கூட்டம் ஒன்றும் ஏற்பாடாகியுள்ளது. யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. என். எஸ். இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு இலாகா அத்தியட்சகர் திரு. என். சிவமுத்துலிங்கம், மாவட்ட சாரண ஆணையாளர் திரு எஸ். சுந்தரமூர்த்தி, பாடநூல் எழுத்தாளர் திரு. க. சி. குலரத்தினம் உட்படப்பலர் உரையாற்றுவர்.

## தொய்வு நோயாளி தற்கொலை

(புலோலி)

தொய்வு நோயினால் பீடிக்கப்பட்டு அவஸ்தைப்பட்ட நபரொருவர் நஞ்சருந்தித் தற்கொலை புரிந்து கொண்டார்.

துன்னாலை - தெற்கு குடவத்தையைச் சேர்ந்த சதிர்காமத்தம்பி ஆழ்வாப்பிள்ளை (வயது 57) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார். இவரது மரணம் சம்பந்தமாக விசாரணைகளைப் பருத்தித்துறை பதில் நீதவான் திரு கே. கே. பாலசுப்பிரமணியம் மேற்கொண்டார்; பருத்தித்துறைபொலிசார்சாட்சிகளை ஆஜர் செய்தனர். இறந்தவர் தொய்வு நோயினால் கஷ்டப்பட்டதாக சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் மகள் இராசம்மா, மைத்துனர் சின்னவன் கணபதிப்பிள்ளையும் இன்னும் சிலரும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## மந்திகை ஆஸ்பத்திரியில் சிற்றுண்டிச்சாலை

(புலோலி)

பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். யோகநாதன் திறந்து வைத்தார்.

இச் சிற்றுண்டிசாலையை வடமராட்சிக்காந்தி சேவா சங்கம் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றது.

இச் சிற்றுண்டிச்சாலையினால் இங்கு பணிபுரியும் ஊழியர்களும் சிகிச்சை பெறுவோரும் பயனடைவார்கள். (அ)


ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
என் கடமை
(புதிய பிரதி)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2 30
சிவாஜி - விஜயா
திருடன்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15 9-30
சனி-ஞாயிறு 2-15
ஞானக்குழந்தை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி10-30, 2-00, 6-00 & 930
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ்நாட்டுக்கைக்கடிகாரங்கள்
**ஓமாக்ஸ்**
வண்ணவண்ண டயல்களில்
ஆண்கள் பெண்களுக்கான
மின்னியக்கி - தன்னியக்கி
விசைதிருப்பி - கடிகாரங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் வாங்கலாம்.
வடபகுதி ஓமாக்ஸ் கைக்கடிகார
விற்பனை முகாமி.
**காந்தளகம்**
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## புனரமைப்பு வேலைகள்

(சுழிபுரம்)

சுழிபுரம் பறுளை ஈஸ்வர விநாயகர் கோவில் பாலஸ்தாபன வைபவம் நடைபெற்றது கோவில் புனரமைப்புகள் நடைபெற்று விரைவில் கும்பாபிஷேகம்நடைபெறவுள்ளது கோவில் முகாமையாளர்கள் இப்புனரமைப்பு வேலைகளை முன்னின்று செய்கின்றார். (சு)

## பாடநூல்கள் விநியோகம்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தில்உள்ள பாடசாலைமாணவர்களுக்கு அடுத்த வருடம் இலவசமாக வழங்கப்படுவதற்கென 27,000 பாடப் புத்தகங்களைக் கல்வியமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

இப்புத்தகங்களை இவ்வட்டாரத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் மேற்கொண்டுள்ளார்.

# இலவசக் கல்வியுடன் இலவச பாடப்புத்தகமும்

## அரசின் செயல்பற்றி அமைச்சர் இராசு

(மட்டக்களப்பு)

'எம்நாட்டில் வசதியற்ற வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்தி அடையவேண்டுமென்பதற்காகவே இலவசக் கல்வியுடன் மட்டுமன்றி இலவச பாடநூல் வழங்கும் திட்டமும் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு சென்ற சனிக்கிழமை மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்தின் புதிய இருமாடிக் கட்டடத்திற்கான அத்திவாரக் கல்லை நாட்டி வைத்த மட்டுநகர் முதல்வரும் பிரா‌ந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திருமதி செல்வி நாகராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: பாடசாலை வாழ்க்கை மிகவும் பொன்னானது. இப்பொன்னான வாழ்வில் மாணவர்கள் தங்கள் எதிர்கால தலைமையை அளிக்கக்கூடிய கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும், பொன்னான நேரத்தை தவறவிட்டு பின்பு சிந்திப்பதில் எவ்வித பயனும் இல்லை.

சிந்திக்கவேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்காமல் நல்லனவற்றை கற்றும் நலம் பெறவேண்டும்.

மாணவர்கள் ஒருபோதும் மற்றவர்களின் பகடைக்காய்களாக மாறக்கூடாது. தங்கள் அறிவைக்கொண்டு வாழ வேண்டும்.

மற்றும் வட்டாரக் கல்வி அதிகா திரு. க யோ. முத்துராஜா உட்பட பலர் உரை

அதனைத்தொடர்ந்து அமைச்சர் மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயத்திலும் புதிய இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லையும் நாட்டினர்.

# தமிழ் மாணவர் விடைத்தாளை தமிழர் ஆசிரியர் திருத்துவர்

## பரீட்சைத் திணைக்கள அத்தியட்சகர் உறுதி

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் நடாத்தப்படவிருக்கும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சை (புதிய பாடத்திட்டம்) தமிழ்மொழிப் பாடத்தின் தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களைத் தமிழர் ஆசிரியர்களும், முஸ்லிம்மாணவர்களின் விடைத்தாள்களை முஸ்லிம் ஆசிரியர்களும் திருத்தவேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் பரீட்சை ஆணையாளரிடம் கோரிக்கை விட்டுள்ளார்.

புதிய பாடத்திட்ட தமிழ் மொழி வினாத்தாளில் மூன்று பகுதிகள் உண்டு. இதில் பகுதி 1க்குரிய வினாக்களை தமிழ் முஸ்லிம் மாணவர்கள் விடையளிக்கவேண்டும். பகுதி 2க்குரிய வினாத்தாள்களை தமிழ் மாணவர்கள் மாத்திரம் விடையளிக்கலாம். பகுதி 3-க்குரிய வினாக்களை முஸ்லிம் மாணவர்கள் மாத்திரம் விடையளிக்கலாம்.

பகுதி 2 தமிழ் இலக்கிய கலாச்சாரத்தை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாகவும் பகுதி 3 முஸ்லிம் இலக்கிய கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வினாக்களையுடையதாகவுமிருப்பதனால் தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களை தமிழர் ஆசிரியர்களும், முஸ்லிம் மாணவர்களின் விடைத்தாள்களை முஸ்லிம் ஆசிரியர்களும் திருத்துவது சிறந்தது என இ. த. ஆ. சங்கப் பொதுச்செயலாளர் பரீட்சைத் திணைக்கள தனி அத்தியட்சகர் திரு. ஆர்தர் வெதமுல்லையை சந்தித்து கேட்டுக்கொண்டார்.

இக்கோரிக்கையை ஏற்ற உதவி அத்தியட்சகர், தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களை தனிப் பொதியாகவும், முஸ்லிம் மாணவர்களின் விடைத்தாள்களை வேறு ஒரு தனிப்பொதியாகவும் கட்டி அனுப்புமாறு பரீட்சை நிலையப் பிரதம மேற்பார்வையாளரைத் தான் கோருவதாகவும், பின்னர் மதிப்பீட்டு நிலையங்களில் தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களைத் தமிழர் ஆசிரியர்களும், முஸ்லிம் மாணவர்களின் விடைத்தாள்களை முஸ்லிம் ஆசிரியர்களும் திருத்துவதற்கான ஒழுங்குகளை தான் மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

# கலட்டு நிலங்களிலிருந்து கற்கள் பெற ஏற்பாடு

## தேசிய வீடமைப்பு அதிகாரசபை நடவடிக்கை

(நெல்லியடி)

தேசியவீடமைப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு நிர்மாண வேலைகளுக்குரிய கற்களை, மேற்படி சபை தனியாருக்குச் சொந்தமான கலட்டு நிலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமது சொந்த செலவில் தனியார் காணிகளிலிருந்து கற்களை எடுக்கவுள்ள அதிகார சபை; நிலச் சொந்தக்காரருக்கு எந்தவித கொடுப்பனவுகளையும் வழங்காது. அதே வேளையில் நிலச் சொந்தக்காரரின் நிலங்களும் துப்பரவு செய்யப்பட்டு விவசாயம் செய்து கொள்ளும் தன்மையில்விடப்படுவதோடு நிலச் சொந்தக்காரரிடமிருந்து செலவுத் தொகையும் அதிகார சபையினால் அறவிடப்படமாட்டாது என்று அதிகார சபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சற்களை அதிகாரசபையினருக்கு வழங்கவிரும்பும் காணிச் சொந்தக்காரர்கள் புத்தூர் கிராமச்சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## திருட்டு

(கோண்டாவில்)

கொக்குவில் கிராமசபைக்கு அருகாமையிலுள்ள இரு கடை கடைகளிலிருந்து சுமார் 5,000 ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இரவு கடையைப் பூட்டி விட்டு வீட்டிற்குச் சென்ற கடைக்காரர்கள், அதிகாலை கடையைத் திறந்தபோது அங்கிருந்து பல பொருட்கள் களவாடப்பட்டிருப்பது தெரிய வந்தது. இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆனைக்கோட்டைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாரணர் தேசிய வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சாரணர் குழு, தேசிய சாரணத் தலைமைப் பீடத்தில் இருந்து வந்த பணிப்புரைகளுக்கமைய இம்மாதம் 3,4,5 திகதிகளில் தேசிய வாரம் கொண்டாடவுள்ளது.

சமய அனுஷ்டானம், புள்ளி விபரக் கணக்கெடுப்பு, அன்னையர் தினம், நட்புரிமைத்தினம், இயற்கை பாதுகாப்புத்தினம், நற்செயல் தினம், மீள் சந்தப்பு ஆகியவை இதன் சிறப்பு அம்சங்களாகும்.

# 'வீடியோ' படம் காட்டியவருக்கு 500 ரூபா அபராதம்; படநாடாவும் பறிமுதல்!

(மட்டுவில்)

அனுமதியின்றி கைதடியில் 'வீடியோ' படக்காட்சி காட்டியவரை, சாவகச்சேரிப் பொலிஸார் கைதுசெய்து, சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு வி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

விசாரணையின்போதுவீடியோ பெட்டியை வைத்திருப்பவர் தனது வீட்டில் வைத்திருக்க மட்டுமே அனுமதியிருக்கிறது என்று தெரிவித்து குற்றத்தையும்ஒப்புக்கொண்டார்

நீதிபதி திரு. வி. வி. விக்னேஸ்வரன் எதிரிக்கு ரூபா 500 அபராதம் விதித்ததோடு வீடியோ பெட்டியை திருப்பிகொடுக்கும்படியும்வீடியோ படநாடாவைப் பறிமுதல் செய்யும்படியும் தீர்ப்பளித்தார். (சு)

## மற்றுமொரு சம்பவம்

(மாவிட்டபுரம்)

சட்டவிரோதமாக தொலைக்காட்சி காட்டியவர், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியிடம் சிக்கிக்கொண்டார்.

கோண்டாவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகானந்தராசா என்பவர் தையிட்டியிலுள்ள விளையாட்டு மைதானமொன்றில் 'வீடியோ' படமொன்றை தொலைக்காட்சியில் காட்டியபோது அங்கு விரைந்த காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஊரஷன் விஜயக்கோன், சப் இன்ஸ்பெக்டர் வீரசிங்கா ஆகியோர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி மேற்படி நபரைக் கைதுசெய்து பொருட்களையும் கைப்பற்றியது. விசாரணையின் பின்னர் சந்தேக நபரிடம் பொருட்கள் கையளிக்கப்பட்டதுடன் அவர் பிணையில்விடப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென உத்தரவிடப்பட்டது.

## அ. மி. ஊழியர் ஐ. நா. கூ. சங்க ஆண்டுவிழா

(மட்டுவில்)

சாவகச்சேரி அமெரிக்கன் மிஷன், ஊழியர் ஐ. நாணய கூட்டுறவுச் சங்கத்தின் 52வது ஆண்டு நிறைவு விழா, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

உபஅதிபர் திரு ஏ எஸ் பாலரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சங்கநிர்வாகத்தின் திறமையை கூட்டுறவு இலாகா தலைமைக் காரியாலய பரிசோதகர் திரு. வி. இராசையா உட்பட பலர் பாராட்டிப் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. பாலச்சந்திரன் (டிறிபேக் கல்லூரி அதிபர்), உபதலைவர் ஆசிரியர்கள் திரு. எம். கனகசபை, ஜனாப் எம். எஸ். பஜீர், செயலாளர்: திரு. எம் நாகேந்திரராஜா, உபசெயலாளர்: திரு. சி கணேசலிங்கம், பொருளாளர்: ஆசிரியர் திரு கே. எஸ். பொன்னையா.

ஐவர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது. (ச)

## தரம் குறைந்த மா விநியோகம் பற்றி புகார்

(பண்டத்தரிப்பு)

சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான மா இம்முறை பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத்திற்கு வழங்கப்படாமையால் இப் பகுதியிலுள்ள பேக்கரி உரிமையாளர்கள் தரமான பாணைத் தயாரிக்க முடியாது பெரும் சிரமமடைகின்றனர். இம்முறை மிகவும் தரம்குறைந்த மா இச் சங்கத்திற்கு வழங்கப்பட்டதினால் அதை வாங்க எவரும்முன்வரவில்லை.என்றும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிநடவடிக்கை மேற்கொண்டு தரமான மாவை அனுப்பி உதவுமாறு இப்பகுதி பேக்கரிஉரிமையாளர்கள் யாழ் அரசாங்க அதிபர், உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோரை கடித மூலம் கேட்டுள்ளனர்.

## பயிற்சி

றேடியோ ரெலிவிசன், ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சி ஆரம்பம் 9-12-1980. அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டிடம் ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7489

## ஜி. சி. ஈ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்,

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ. (உயர் தர) பரீட்சை முடிவுகளை அடுத்த வருட முற்பகுதியில் பரீட்சைத்திணைக்களம் வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (வெ)

## யாழ்ப்பாண..

(1-ம பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றபோது உரையாற்றுகையில்தான் திரு. வெ. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

"வேலை வாய்ப்புக்களைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் கடுமையாகப் புறக்கணிக்கப்படுகின்றனர். வேலை வங்கிப் படிவங்கள் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவில்லை. தகுதி அடிப்படையில்தான் வேலை வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம். ஆனால் வேலை வங்கி மூலம் தெரிவாகும் முறை, இதற்கு மாறாகவே இருக்கிறது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வேலை வங்கிப் படிவம் மூலம் ஒருவருக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டுள்ளது" என்றும் திரு. வெ. யோகேஸ்வரன் குறிப்பிட்டார். (ம)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி, 65-ம் இலக்க அச்சகத்தில் ... வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No QD 8948/78 The Eelanaadu டிசம்பர் 3-ம் திகதி
Grams Eelanaadu, Phone, 389. The Eelanaadu R. No 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org